Free Circulation Germany- England
மணி: 72 - ஓசை: 308 வைகாசி. May. 2022

# வெற்றிமணி
Vettimaniy
ESTD 1950
28TH years IN EUROPE Successful Publishing
பிரதம ஆசிரியர் கலாநிதி மு.க.சு.சிவகுமாரன்.B.F.A

Orientalisch
Textilien &
Schmuck
32 ஆவது ஆண்டு நிறைவு
என்றும் எம்முடன் தொடர்பில் இருங்கள்
Königswall 16 (Am Hbf)
44137 Dortmund
Tel:0231 162377



## எந்த நம்பிக்கையில் நாங்கள் கை கோர்ப்பது?
## ஆனால் மாற்றம் ஒன்றே வழி!
ஜூட் பிரகாஷ்– மெல்பேர்ண்

யேர்மனியில் தேர்க்காலம் 2022

## கடன் சூழ் உலகம்
பிரியா இராமநாதன்– இலங்கை

1 MAY HAPPY LABOUR DAY

## ராஜபக்சக்களின் எதிர்காலமும் காலிமுகத்திடல் போராட்டமும்!
● இலங்கையிலிருந்து ஆர்.பாரதி





ஷாலினி பிள்ளை
(இலங்கை வசந்தம் தொலைக்காட்சி செய்தி வாசிப்பாளர் – நிகழ்ச்சித் தொகுப்பாளர்)

## ரூபன் சிவராஜாவின்
மூன்று நூல்கள் அறிமுக நிகழ்வு
10.04.2022– நோர்வே





தமிழர் இல்லம் எங்கும் ஒலிக்கட்டும் வெற்றிமணி







# நான் ஏன் ஒரு தனி வாழைப்பழம் ஆனேன்!

## வருடம் ஒன்றுக்கு யேர்மனியில் 50 மில்லியன் பழங்கள் வீணாகிறது!



● மாதவி

தாயகத்தில் நாம் வாழ்ந்த காலத்தில் வாழைப்பழம், கடைகளில் குலை குலையாக தொங்கும்.திருமண வீடுகளில் வாசலில் இருமருங்கிலும் பழுத்த வாழைக்குலைகள் தொங்கும். குலையில் உள்ள ஒவ்வொரு பழமும் தடித்த பெருத்த திரண்ட பழமாக இருக்கும். அவற்றைக் கண்டால் எவர்க்கும் ஒன்று பிடுங்கவே தோன்றும்.

நாம் சிறு வயதில் எவரும் பார்க்காத வேளை பழத்தை முறுக்கி பிடுங்கிக்கொண்டு ஓடுவோம். பெரும்பாலும் பெண்பிள்ளைகள் இந்த கள்ளவிளையாட்டில் ஈடுபடுவது குறைவு. யாரும் ஈடுபட்டு இருந்தாலும் தப்பில்லை.

தப்பில்லை என்பதற்கு காரணம், நம்ம ஊரில்,சில திருட்டுக்களை திருட்டுக்களாக எடுப்பதில்லை, மாங்காய் திருட்டு, நாவல் பழம் திருட்டு, இளநீர் உட்பட பல திருட்டுக்களை, பெரியமனிதர்கள் இதனை இளசுகள் செய்தால் மகிழ்வுடன் கண்டும் காணாமல் போய்விடுவார்கள்.

கடைகளில் வாழைக்குலைகள் தொங்கினால், நாம் எந்த சீப்பு பழம் வேண்டும் என்று காட்டுவோம், அவர்கள் பக்குவமாக அக்கம் பக்கம் பழம் காயப்படாமல் வெட்டித் தருவார்கள். குலையில் ஒரு பழமும் வீணாகாதவாறு பார்த்து பார்த்து வெட்டி தருவார்கள். ஒரு பழம் மட்டும் கேட்டால் அதற்கும் கவனமாக அருகில் உள்ள பழம் சிதையாமல் வெட்டி தருவார்கள்.

அங்கு குலைகளில் ஒரு பழம் பிடுங்குவதற்கும் மேற்கு நாடுகளில் சீப்பு சீப்பாக இருக்கும் வாழைப்பழத்தில் ஒரு பழம் பிடுங்குவதற்கும் நிறைய வித்தியாசம் உண்டு. தாயகத்தில், குலையில் நம் கண்ணெதிரில் ஒரு பழம் பிடுங்குவது என்றால் தனிப்பழமாக இருந்தாலும் பிடுங்கி தந்தால் அது நல்லபழம் என்று வாங்குவோம் .

ஆனால் வெளிநாடுகளில் சீப்பு சீப்பாக இருக்கும் வாழைப்பழத்தில் மூன்று பழம் தேவை என்றாலும், தனிச்சீப்பில் இரு பழமும், இன்னும் ஒரு சீப்பில் ஒரு பழமும் பிடுங்குவார்கள்.

முதல் வாங்குவர் ஒரு சீப்பில் 3 பழமிருக்க 2 பழம் பிடுங்கிவிட்டு ஒரு பழத்தை விட்டு விட்டு போவார். இனி அடுத்தவர் ஒரு பழம் தேவை என்றல் அங்கு தனிய இருக்கும் ஒரு பழத்தை எடுக்காது, மீண்டும் 6

பழம் உள்ள சீப்பில் ஒரு பழம் பிடுங்கிச் செல்வார்கள். இங்கு இரண்டு பழமோ, ஒரு பழமோ சீப்பில் இருந்து பிடுங்கினால்த்தான், நல்லது என்று மனம் எடைபோட்டு விடும், இதனால் நூற்றுக் கணக்கான நல்ல தனி வாழைப்பழம் எவரும் வாங்காது அழுகி வீணாகி விடும். தனித்து இருக்கும் நல்ல பழங்களில் 2 தேவையானோர் எடுப்பார்களா இருந்தால், எவ்வளவு உதவியாக இருக்கும், உற்பத்தியாளர்களுக்கு, இந்த உலகிற்கும் என்று எண்ணுங்கள்.

கடந்த வருடம் மட்டும் யேர்மனியில் தனிப்பழம் கூடாது என்று சீப்பில் ஒரு பழம் பிடுங்கியவர்களாலும், தனிப்பழத்தை எடுக்காதவர்களாலும் மட்டும் 50 மில்லியன் நல்ல வாழைப்பழங்கள் வீணாகி விட்டன. இதனை எண்ணிப்பாருங்கள். பிற நாட்டவர்கள் செய்தால் அவர்க்கு வாழைப்பழம் உரிக்கும் பக்கமே தெரியாதவர்கள், ஒரு குலையை முழுதாக மரத்தில் காணாதவர்கள், ஒரு வாழை ஒரு குலைதான் போடும் என்பதனை அறியாதவர்கள், எப்படி என்றாலும், நடக்கட்டும். ஆனால் எமது அப்பு, ஆச்சி, உருவாக்கிய வாழைப்பழம், அதன், கஷ்டம், பெறுமதி தெரிந்தவர்கள், 50,மில்லியன் பழங்கள் வீண்போகுது என்றால் நெஞ்சு பொறுக்குமா! தற்போது சில கடைகளில் எம்மால் பிரிக்கப்பட்டு தனிப்பழமாக்கப்பட்ட வாழைப்பழங்களை, குறைந்த விலையில் தனிப்பழங்களாக விற்கிறார்கள். ஒரு பழம், இரண்டு பழம்


28 ஆம் பக்கம் பார்க்க...



வெற்றிமணி

தமிழ் எங்கள் உயிருக்கு மேல்

ஓசை : 308


ஆரம்பம்: 1950

ஸ்தாபகர்
அமரர் மு.க.சுப்பிரமணியம்
( முன்னாள் அதிபர்: குரும்பசிட்டி பொன். பரமானந்தர் வித்தியாலயம்)

பிரதம ஆசிரியர்
'ஓவியக்கலைவேள்'
கலாநிதி
மு.க.சு.சிவகுமாரன்
Chief Editor:
Dr.M.K.S.Sivakumaran B.F.A



Tel: +49 01631992333
+49 01631992333

e-mail: vettimaniy@hotmail.com


"வெற்றிமணிமொழி'
தோல்வியைக் கண்டு
அஞ்சுபவர்களிடமிருந்து
வெற்றி தானாகவே
விலகிச்செல்கிறது


Vettimaniy Ltd
Company No: 8876276




# ராஜபக்சக்களின் எதிர்காலமும் காலிமுகத்திடல் போராட்டமும்!



**இலங்கையிலிருந்து**
**ஆர்.பாரதி**

சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தைகளை இலங்கைத் தூதுக்குழு அமெரிக்காவில் ஆரம்பித்துள்ள நிலையில் இந்தியாவும் இலங்கைக்கு ஆதரவாக குரல் கொடுத்துள்ளது. இலங்கைக்கு தேவையான நிதி உதவிகளை நாணய நிதியம் வழங்கவேண்டும் என இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் கோரிக்கை விடுத்திருக்கின்றார். இலங்கை எதிர்பார்க்கும் கடன் உதவிகள் கிடைக்கும் என்றாலும், நாட்டில் உருவாகியுள்ள நெருக்கடியைத் தீர்ப்பதற்கு அது மட்டும் போதுமானதாக இருக்குமா என்ற கேள்வி இப்போது எழுகின்றது.

அதாவது ராஜபக்சக்களின் எதிர்காலத்தை இந்த கடனுதவி மட்டும் உறுதிப்படுத்துமா என்பது முக்கியமான கேள்வியாகவுள்ளது.

இலங்கை தற்போது எதிர்கொள்ளும் அந்நியச் செலாவணிப் பிரச்சினைக்குத் தீர்வைக்காண்பதற்கு சர்வதேச நாயணா நிதியம் உதவப்போகின்றது என்றாலும் கூட



அதற்காக முன்வைக்கப்படும் நிபந்தனைகள் இலங்கையில் தற்போது காணப்படும் கொந்தளிப்பு தொடர்வதற்குக் காரணமாக இருக்கலாம். இலங்கையின் பொருளாதார நெருக்கடி தீவிரமடைந்து மக்கள் வீதிகளில் இறங்குவதற்கு முன்னதாகவே – சர்வதேச நாயண நிதியத்திடம் செல்லுங்கள் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவுக்கு ஆலோசனை வழங்கப்பட்டிருந்தர்து. முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மட்டுமன்றி – பொருளாதார நிபுணர்கள் பலரும் கூட, இதனைத் தொடர்ந்து வலியுறுத்திவந்தார்கள்.

இருந்த போதிலும் ஜனாதிபதி அதனை ஏற்காமைக்கு அரசியல் ரீதியான காரணங்களே அடிப்படையாக இருந்தன. நாணய நிதியம் முன்வைக்கும் நிபந்தனைகள் அரசுக்கு சங்கடமான நிலையை ஏற்படுத்தும் என்பதுதான் அதற்குக் காரணம்.

வரிகளை அதிகரிப்பது மற்றும் மானியங்களை நிறுத்துவதன் மூலம் அரசாங்கம் தனது வருமானத்தை அதிகரித்துக்கொள்ள வேண்டும் என்பது நாணய நிதியம் முன்வைக்கும் முதலாவது நிபந்தனையாக இருக்கும். கடந்த திங்கட்கிழமை இரவு அதிரடியாக எரிபொருட்களினதும், கோதுமை மாவினதும் விலைகள் அதிகரிக்கப்பட்டது நாணய நிதியத்தை திருப்திப்படுத்தத்தான் என்பதை பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள்.

செவ்வாய்கிழமை நாணய நிதிய அதிகாரிகளுடன் வாசிங்டனில் பேச்சுக்கள் ஆரமடபமாகவிருந்த பின்னணியிலேயே இவ்வாறு விலைகள் அதிகரிக்கப்பட்டன. எரிபொருட்கள் கோதுமை மா போன்றன உலக சந்தை விலையில்தான் இலங்கையில் விற்கப்பட வேண்டும். அவற்றுக்கு குறைந்த விலையில் அவற்றை விற்பதன்மூலம் வரக்கூடிய நட்டத்தை மாநியம் என்ற பெயரில் அரசு பொறுப்பேற்கக்கூடாது என்பது நாணய நிதியம் வலியுறுத்தும் விடயமாக இருந்துவருகின்றது. இந்தப் பின்னணியில்தான் இந்த இரண்டினதும் விலைகள் அதிரடியாக அதிகரிக்கப்பட்டது.

29 ஆம் பக்கம் பார்க்க...






அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்

# யேர்மனியில் தேர்க்காலம் ௨0௨௨



## ஆலயங்களின் கொடியேற்றம் – தேர் உற்சவங்கள் 2022

தொகுப்பு: ஆன்மிகத்தென்றல்
த.புவனேந்திரன் (யேர்மனி)

**வூப்பெற்றால் ஸ்ரீ நவதுர்க்கா அம்பாள் ஆலயம்**
Tel: 0202 479 60 17
கொடி : 06.05.2022 - தேர்: 14.05.2022
Hünefeld Str 63b
42282 Wuppertal

**சுட்காட் ஸ்ரீசித்திவிநாயர் கோவில்**
Tel:0176 434 424 39
கொடி: 11.06.2022 - தேர்: 19.06.2022
Lehmfeld Str 18
70374 Suttgart

**கற்றிங்கன் ஸ்ரீ வரசித்திவிநாயகர் ஆலயம்**
Tel: 02324 27061, 01577 36 63 939
கொடி: 11.06 2022 - தேர்: 19.06.2022
Gottwald Str 23
45525 Hattingen.

**ஹம் ஸ்ரீ காமாட்சிஅம்பாள் ஆலயம்**
Tel: 02388 302 223
கொடி: 13.06.2022 - தேர்: 26.06.2022
Siegenbeck Str 4-5, 59071 Hamm

**எசன் ஸ்ரீகதிர்வேலாயுதசுவாமி ஆலயம்**
Tel: 0201 806 74 33
அலங்கார உற்சவம்: 02.07.2022-
தேர்: 10.07.2022
2021Kloster Str 49 a, 45149 Essen

**டோட்மூண்ட் ஸ்ரீ சாந்தநாயகி சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலயம்**
Tel: 0231 72515165
கொடி: 02.07.2022 - தேர்:10.07.2022
Klefer Str 24, 44225 Dortmund

**கிறிவீல்ட் ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலயம்**
Tel: 02151 565 00 45
கொடி: 02.07.2022 - தேர்: 10.07.2022
Girmesgath 95, 47803 Krefeld

**பிறாங்போட் நாகபூசணி அம்பாள் ஆலயம்**
Tel: 069 979 45 618
கொடி: 03.07.2022 - தேர்: 16.07.2022
Adelbert Str 61-63 | 60486 Frankfurt/M

**கொமஸ்பாக் குறிஞ்சிக்குமரன் ஆலயம்**
Tel: 02261 5015 964, 0176 3015 2913
கொடி: 09.07.2022 - தேர்: 17.07.2022
Industrie Str 7; 51643 Gummersbach

**ஹம் திருநல்லூர் ஆறுமுக வேல்லழகர் ஆலயம்**
Tel: 02381 291 03
கொடி: 04.07.2022 - தேர்: 16.07.2022
Roon Str 2 a; 59065 Hamm

**சுட்காட் சித்திவிநாயகர் அலயம்**
Tel: 0711 470 30 47
கொடி: 22.07.2022 தேர்: 31.07.2022
Waiblnger Str 30; 70372 Suttgart

**சுவெற்றா கனக துர்க்கா அம்பாள்ஆலயம்**
Tel: 02304 16721
கொடி: 23.07.2022 - தேர்: 31.07.2022
Roberte koch Str 5 a, 58239 Schwerte

**கிஸ்கெம்ரெக் கனகதுர்க்கஅம்பாள் ஆலயம்**
Tel: 07021 807 43 99
அலங்காரத் திருவிழா: 30.07.2022 -
தேர்: 07.08.2022
Alleen Str 18-20 73230 Kirchheim U. Teck.

**ஹம் சித்திவிநாயகர் அலயம்**
Tel: 02381 162 686
கொடி: 31.07.2022 - தேர்:07.08.2022
Ferdinand poggel Str25, 59065 Hamm

**கவுஸ்கொம் முல்கைம் முருகன் ஆலயம்**
Tel: 0152 537 924 93
அலங்காரத் திருவிழா: 12.08.2022 - தேர் 21.08.2022
Hauskam Str 58; 45476 Muelheim/Ruhr

**பேர்லின் மயூரபதி முருகன் அலயம்**
கொடி: 02.08.2022 - தேர்: 25.08.2022
Blaschko Alle 48; 12355 Berlin.

**ஹம் வெங்கடேஸ்வரப்பெருமாள் கோவில்**
Tel: 02381 42 66 420
அலங்கார உற்சவம்: 25.08.2022 -
தேர்: 04.09.2022
Nassauer Str 20; 59065 Hamm




அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்



# எரிபோருள் தட்டுப்பாட்டால் மீன் விலை சரிவு!

## யாழ்ப்பாண மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்பு!

யாழ்ப்பாணத்தில் வருவாய் ஈட்டும் ஒரு முக்கியமான தொழிலாக விவசாயம்,மீன்பிடித் தொழில் என்பன இருந்துவருகிறது. 2017ஆம் ஆண்டின் கணக்கெடுப்பின்படி சுமார் 21, 200 குடும்பங்களைச் சேர்ந்த ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் மீன்பிடித் தொழிலைச் சார்ந்திருக்கிறார்கள். ஆனால், தற்போதைய பொருளாதார நெருக்கடியை ஒட்டி எழுந்திருக்கும் எரிபொருள் தட்டுப்பாடு இந்தத் தொழிலுக்கு மிகப் பெரிய சவாலாக எழுந்து நிற்கிறது.

யாழ்ப்பாணத்தின் குரு நகர் கடற்கரைப் பகுதியில் படகுகளுக்கு மண்ணெண்ணை வாங்க சுமார் ஆறு மணி நேரத்திற்கும் மேலாகக் காத்திருக்கிறார்கள் மீனவர்கள். அவர்களது நாளின் பெரும்பகுதி மண்ணெண்ணைய்க்காக காத்திருப்பதிலேயே போய்விடுகிறது.

“எங்கிட்ட ரெண்டு போட் இருக்கு. ஆறு தொழிலாளி போவார். தொழில் ஓடினால்தான் அவங்களையும் பார்க்கலாம். இங்க எண்ணைக்கு வந்தா பிரச்னை. எங்க போனாலும் கேன்ல தரவே மாட்டாங்க. நாங்க ஆட்டோ பிடிச்சுக் கொண்டு வந்தா, அல்லபிட்டியிலிருந்து ஆட்டோ பிடிச்சுக்கொண்டு வந்தா ஆயிரம் ரூபாய்... டீசல் கிடைக்காட்டியும் கொடுக்க வேண்டும். அதைக் கொடுத்துட்டு தொழிலாளிக்கும் கொடுக்க இயலுமா?“ என்கிறார்கள். இங்கு சிறு சிறு படகு உரிமையாளர்கள் இருக்கிறார்கள். தங்கள் படகுகளில் தொழிலாளர்களை பணிக்கு அமர்த்தி வரும் வருவாயைப் பிரித்துக் கொள்கிறார்கள். இப்போது எரிபொருள் விலையேற்றத்தாலும் மீன்களை வாங்க ஆட்கள் குறைவாக வருவதாலும் இதில் சிக்கல் ஏற்பட்டிருக்கிறது.



காக்கை தீவு படங்கள்: வெற்றிமணி

யாழ்ப்பாணத்தின் வெவ்வேறு பகுதிகளில் வெவ்வேறு விதமான மீன் பிடித் தொழில் நடந்து வருகிறது. காக்கைத் தீவு பகுதியில் சிறகு வலை மூலம் மீன் பிடிக்கும் தொழில் மிகப் பரவலாக இருக்கிறது. ஆழமில்லாத கடல் பகுதியில் நீண்ட கம்பிகளை ஊன்றி, வலைகளை இணைத்து, மீன் பிடிக்கும் இந்த முறைக்கு ஒரு தடவைக்கு கிட்டத்தட்ட ஒரு லட்சம் ரூபாய் வரை செலவாகிறது. விரிக்கப்பட்ட வலை சுமார் 15 நாட்களுக்குக் கடலிலேயே இருக்கும். மீனவர்கள் தினமும் சென்று அந்த வலையைக் கண்காணித்து வர வேண்டும். ஆனால், தற்போது எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதால் மூன்று நாட்களுக்கு ஒரு முறைதான் கடலுக்குச் சென்று பார்க்க முடிகிறது. இதற்கு நடுவில் வேறு படகுகள் வலையை அறுத்து, மீன்கள் வெளியேறிவிட்டாலோ, கம்பங்கள் சாய்ந்து மீன்கள் வெளியேறிவிட்டாலோ பெரும் இழப்புதான்.

இவ்வளவு சிரமத்திற்கு நடுவில் மீன் பிடித்து வந்தாலும் இத்தனை நாட்களாக பிடித்துவந்த மீனுக்கு நல்ல விலையாவது கிடைத்து வந்தது. ஆனால், இப்போது வாகனங்களுக்கான டீசல் தட்டுப்பாட்டின் காரணமாக, கொள்முதல் செய்யும் வாகனங்களே மிகக் குறைவாக வருகின்றன. இதனால்,மீன்களுக்கு நல்ல விலை கிடைப்பதில்லை. “முன்பெல்லாம் நாங்கள் மீன் கொண்டு வந்தோமென்றால் கூலர் (குளிர்பதன வசதியுடன் கூடிய சரக்கு வாகனம்) வந்து நிற்கும். அவர்கள் நல்ல விலைக்கு எடுப்பார்கள். இப்போது மீனைக் கொண்டு வந்தால் கூலர்கள் பெரிதாக வருவதில்லை. ஐசும் கிடைப்பில்லை. நாங்க காலம்பர கொண்டு வரும் மீனைக் குறிப்பிட்ட நேரத்திற்குக் கொண்டுவர வேண்டும். குறிப்பாக ஏழு மணிக்கு முன்பாக வரும் மீனைத்தான் விற்க முடியும். பிந்தி வரும் மீன்களை பாதி விலைக்குத்தான் கேட்பார்கள். ஐநூறு ரூபாய்க்கு விற்கக்கூடிய மீனை 200-300 ரூபாய்க்குத்தான் விற்க முடிகிறது. இதனால் பெரும் இழப்பு ஏற்படுகிறது.“ என்கிறார் காக்கைத் தீவைச் சேர்ந்த மீனவரான சிவா.

யாழ்ப்பாணத்தின் ஊர்காவற்துறை பிரதேசத்தில் நண்டுகளைப் பதப்படுத்தி ஏற்றுமதி செய்யும் தொழிலும் பரவலாக நடக்கிறது. ஆனால், இதற்கு முக்கியத் தேவையாக ஐஸ் கட்டி இருக்கிறது. ஆனால், இதனை உருவாக்க மின்சாரமோ, டீசலோ இல்லாததால், ஏப்ரல் மாதத் துவக்கத்திலிருந்து இந்த நண்டு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் முடப்பட்டிருக்கின்றன. இந்த நண்டு பதப்படுத்தும் தொழிற்சாலைகள் மூடப்பட்டிருப்பது மீனவர்களுக்கு மட்டுமல்லாமல் பல்வேறு தரப்பினருக்கும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

“முன்பு ஆயிரத்து இருநூறு ரூபாய்க்கு கொள்முதல் செய்த நண்டை இன்றைக்கு வெறும் 700 ரூபாய்க்குத்தான்

28 ஆம் பக்கம் பார்க்க...



அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்




அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்




# கடன் சூழ் உலகம்!

## நல்ல கடன்காரன் என்றால்! நீங்கள் அச்சம் தவிருங்கள்!

இது நிச்சயமாக இலங்கை உலகத்திடம் வாங்கிய கடனால் படும் அவஸ்த்தை பற்றது அல்ல. இது தனி மனிதனின் நிலைபற்றிது. சிலர் அவன் நல்ல கடன் காரன் என்பார்கள்.அதன் அரத்தம் நேரடியாக பொல்லாத கடன் காரன் போல் தோன்றியாலும், இறுதியில் நல்லகடன் எது? கெட்ட கடன் எது என்பதை ஓர் அளவு புரிய வைக்க முயல்கிறேன்.

"கடன் அன்பை முறிக்கும்" என்பது வெறும் பழமொழி மட்டுமல்ல, அது நம் முன்னோர்களின் அனுபவப்பாடம்.

கடனில்லாத வாழ்க்கையே சிறந்த வாழ்க்கை என தேவைகள் அதிகமில்லாத நம் முன்னோர்கள் வாழ்ந்து காட்டியிருக்கலாம். ஆனால்,இன்றைய நவீன யுகத்தில் கடனில்லாத வாழ்க்கையென்பது சாத்தியம்தானா? "கடவுளாகவே இருந்தாலும், வாழ்க்கையில் என்றாவது ஒரு நாளேனும் கடன் வாங்கியேயாக-வேண்டும், கடன் என்ற பிடியில் சிக்காத மனிதனே இல்லை ",என்கிற அளவுக்கு நமது வாழ்க்கைமுறை மாறியிருக்கிறது. இதற்கேற்ப முன்பு எப்போதையும் காட்டிலும் இப்போதெல்லாம் கடன் வாங்குவதற்கான வாய்ப்புக்களும் பல மடங்குகளாக அதிகரித்துள்ளன என்றால் மிகையில்லை. கடன் கொடுப்பதற்க்கென்றே வாடிக்கையாளர்களை தேடிப் பிடித்து இழுக்கின்றன வங்கிகள். தொலைக்காட்சிகளில் சரிபாதி விளம்பரங்கள் வீட்டுக்கடன், வாகனக்கடன் வழங்குவது பற்றியே. இதுதவிர தனிநபர் கடன், திருமணம், கல்வி, சுற்றுலா, மருத்துவ செலவு என அனைத்து வகைகளிலும் கடன் வாங்குவதென்பது இன்று அதிகரித்துள்ளது. கூடவே வீட்டு உபயோகப் பொருட்களுக்கான இன்ஸ்டால்மெண்ட், கிரெடிட் கார்ட் போன்றனவும் கடனுடன் சேர்ந்தவையே.




முன்பெல்லாம் ஒரு இக்கட்டின் போது மற்றவர்கள்முன் பணத்துக்காக தலைகுனிந்து நிற்பது அவமானமான ஒரு செயலாக கருதப்பட்டது. ஆனால் இன்றோ, கடனுக்கு மிக அழகிய முலாம் பூசப்பட்டுவிட்டது! கடன் வாங்குவதே மிகப்பெரிய கௌரவம் எனும் நிலை வந்திருக்கின்றது. "எனக்கு கடன் கொடுக்க எதனை பேர் இருக்கிறார்கள் தெரியுமா?" என சொல்லிக்கொள்வதே பெருமைக்குரியவொன்றானது. நாகரீக வாழ்க்கையில் கௌரவத்தின் ஓர் அங்கமாக வங்கிகளின் "கடன் அட்டைகள்" முக்கிய இடம்பிடித்துள்ளன. கடனட்டைகளை வைத்திருப்பது அந்தஸ்தில் உயர்நிலையில் இருப்பதாக வெளி உலகுக்கு காட்டிக் கொள்ளும் அடையாளமாக மாறிப் போனது. கடன் வாங்குவது தவறில்லை என்ற எண்ணம் பரவலாக பரப்பப்பட்டுள்ளது. நாம் ஒருவரிடம் எந்தப் பொருளை கைமாற்றாக கேட்டு வாங்கிக் கொண்டாலும் அது கடன்தான். ஆனாலும் "கடன்" எனும் சொல் நடைமுறையில் வாங்கிய பணத்திற்கு மட்டுமே பெரும்பாலும் குறிப்பிடப்படுகிறது. "நான் எவருக்குமே கடன் பட்டதில்லை" என்று பெருமைபட்டுக்கொள்ள எல்லோராலும் முடிவதில்லை."கடன்பட்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்" என,கடன் ஏற்படுத்தும் மனசுமைகளை குறித்துக்காட்டினாலும் அதை வாங்குவது தவிர்க்கவியலாததோ? வரலாற்றுக் கதையொன்றில், மரணப்படுக்கையில் இருந்த சாக்ரடீஸ் அருகிலிருந்த தன் நண்பரிடம் தன்சார்பில் அண்டை வீட்டிற்கு ஒரு கோழியை திருப்பிக்கொடுக்க-வேண்டும் என கேட்டுக்கொண்டாராம். இந்த நிகழ்வு உணர்த்தவருவது எதனை? நாணயமான மனிதர்கள் எவருமே கடனோடு இறக்க விரும்புவதில்லை என்பதையோ?

பொதுவாக பார்க்கையில் தக்க சமையத்தில் கிடைக்கின்ற உதவிதான் "காலத்தினால் செய்த நன்றியாக"பரிணமிக்கிறதுபோலும். பணத்தை மையமாக கொண்ட, முற்றிலும் வணிகமயமாகிவிட்ட வாழ்க்கை முறையில் "உடுக்கை இழந்தவன் கைபோல" அவசரத்துக்கு பணம் தந்து உதவுவதுதான் ஆழமான நட்பின் வெளிப்பாடு என்பது இன்றைய புதுமொழியோ? அதனால்தானோ என்னவோ வங்கிகளும் "உற்ற நண்பனாக " தங்களை விளம்பரப்படுத்திக் கொள்கின்றன. வேலைக்கு சேர்ந்தவுடனே சம்பளத்துக்காக வங்கிக்கணக்கு ஆரம்பிக்கும்போதே கிரெடிட் கார்டும் கிடைத்து விடுகிறது.



பிரியா இராமநாதன்
(இலங்கை)

### "கடன் " என்பது ஓர் சமூகத் தீமையா?

கடன் பற்றிய நம் சமூகத்தின் பார்வையே வேறு, கடன் என வருகிறபோது இன்னுமே பலர் கட்டுப்பெட்டியாகவே இருக்கிறார்கள். தப்பு,தீமை,குற்றம், அவமானம் என்று கடன் வாங்குதலையே செய்யக்கூடாத செயலாக வகைப்படுத்திவைத்திருக்கிறோம் நாம்!"கடன் வாங்கி வாழ்க்கையை ஓட்டுவதெல்லாம்

10 ஆம் பக்கம் பார்க்க...



அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்



# பிளவு...

**எங்கள் வாழ்க்கையில் சமூகம் தாண்டி தனிமனிதனாக வாழ்க்கையில் தப்பினால் சரி எண்டு சமூகம் பிளவுபடத்தொடங்கின நாள்!**

"மனோகரா தியட்டரடியில குண்டு வெடிச்சு பெரிய சண்டையாம், கனபேர் செத்திட்டாங்களாம், அதால நாங்கள் ஓடி வந்திட்டம் நாவலர் பள்ளிக்கூடத்தில இருந்து", எண்டு கொஞ்சச் சனம் உள்ள பூந்திச்சிது. அவங்கள் சொன்ன லிஸ்டல் யாழ் இந்துக்கல்லூரியும் இருந்ததால நாங்கள் கொஞ்சம் வேளைக்கே போய் அங்க ஒதுங்கியிட்டோம்.

வாங்குக்கு மேல வாங்கை கவிட்டு அடுக்கி செல்லடி பட்டாலும் பாதுகாப்பா பங்கர் போல மாத்தி , அதுக்கு மேல உடுப்பு bag எல்லாம் வைச்சிட்டு கீழ ரெண்டு வாங்கு இடைவெளியில ஒரு குடும்பம் எண்டு ஐக்கியமானனம். வீட்டை இருந்து கொண்டு வந்த சாப்பாடு ஒரு இரவில முடிய யாழ் இந்து விடுதி சமையலறை தான் எல்லாருக்கும் சாப்பாடு போட்டது. பள்ளிக்கூட விடுதிப் பெடியளுக்கு சமைக்க வைச்சிருந்ததும் ஒரு நாளைக்குத்தான் காணும் என்ன செய்யலாம் எண்டு கேள்விக்கு விடை தேடினம்.

யாழ்ப்பாணம் எண்டால் நூறடிக்கு ஒரு சந்தி, சந்திக்கு சந்தி நாலு கடை. மூடீட்டுப் போன இந்தக்கடையை உரிமையோட உடைச்சு மூட்டையைக் கொண்டு வர, எங்களோட இருந்த தாமோதர விலாஸ் சமையல்காரர் கரண்டி தூக்க, முதலாவது அகதி முகாம் சாப்பாடு தாமோதர விலாஸ் மசாலைத் தோசை மணத்தோட உள்ள போச்சுது. காலமை சுடுதண்ணி மட்டும் குடுக்கிறது. அவரவர் கொண்டு போய் தேத்தண்ணி போட, மத்தியானம் தழுசை, பின்னேரம் ரொட்டி எண்டு ரெண்டு நாள் சாப்பாடு கிடைச்சிது. சோத்துக்குள்ள நாலு பருப்பு உப்பு புளி இருந்தால் ஒரு மரக்கறி எல்லாம் சேத்து அவிச்சு சிரட்டையில வடிவா அடிச்சு வாறது தான் தழுசை. ஆக்களுக்கு குடுக்கிற அந்த அளவுச் சாப்பாடு கொண்டு வரேக்க ஆள் இருந்தாத் தான் கிடைக்கும். சாப்பாடு அங்கால இங்காலபோனால்அதுகும் இல்லை. சாப்பாட்டை சமாளிச்சு ஆத்திரம் அவசரம் வரேக்க அக்கம் பக்கம் மதில் பாஞ்சு போய் வந்து கொண்டும் இருந்தம்.

காலமை எட்டு மணி இருக்கும் குண்டு வெடிக்கிற சத்தம் கூடக் கேக்கத் தொடங்கிச்சுது. பள்ளிக்கூடத்தின் ரோட்டிக்கு அங்கால குமாரசாமி மண்டபம் பக்கமும் நிரம்பி இங்காலேம் நிரம்பீட்டுது. சனம் கூடீட்டிது. இனி ஆரும் வந்தாக் கஸ்டம் அதோட எண்டு கேற்றை சிலர் மூடி இருக்கேக்க தான் இந்த புது வரவுக்குடும்பம் நாவலர் ரோட் கதையை வந்து எடுத்து விட்டிச்சிது. வந்த சனத்திக்கு கேற்றைத் துறக்காம இங்க இடமில்லை எண்டு ஆரோ சொல்ல, பொங்கி எழுந்த பிள்ளையார் ராசா அண்ணா நிர்வாகத்தோட சண்டைபிடிச்சு அவையை உள்ள விட்டார். வந்தவை சொல்லிச்சினம் நாவலர் பள்ளிக்கூடத்திலேம் சனம் நிறைய இருந்தது, குண்டு வெடிச்சாப் பிறகு துவக்குச் சூடும் கேட்டது அதுகும் பள்ளிக் கூடத்திக்குள்ள இருந்து தான் கேட்டது எண்டு, இன்னொரு பெரிய ஒரு குண்டைப் போட்டிச்சினம்.



Dr.T. கோபிசங்கர்
(யாழ்ப்பாணம் அரச வைத்தியசாலை)
இலங்கை

கேட்ட இந்த விடுப்பை உடனடியா கொஞ்சம் உப்பு உறைப்பு சேத்து எல்லாரையும் பயப்பிடித்திட்டு மத்தியானக் குழைசாதத்தை விழுங்கீட்டு திரும்பி வந்து விடுதிச் சாப்பாட்டு அறைக்க காட்ஸ் விளையாடத் தொடங்கினம். ஐஞ்சு மணியாகுது எழும்புவம் எண்டு cards விளையாடின வாங்கில எழும்பி நிண்டு விளையாட்டு மைதானம் பக்கம் பாக்க கஸ்தூரியார் றோட் மதிலால பச்சைத் தொப்பிகள் பாயிறது தெரிய, வந்திட்டாங்கள் எண்டு சொல்லிக்கொண்டு எல்லாரும் ஓடிப்போனம்.

வந்தவங்கள் உள்ளுக்க வரேல்லை, பள்ளிக்கூட நிர்வாகக் கட்டிடத்தில் இருந்த பெரிய ஆக்களோட ஏதோ கதைச்சவையாம், அவங்கள் சொல்லும் வரை ஒருத்தரையும் வெளீல திரியவேண்டாமாம் எண்டு சொல்ல, எல்லோரும் போய் அவையவை பிடிச்சிருந்த இடங்களில் ஐக்கியமானோம்.

பள்ளிக்கூடத்திக்கு பின்பக்கமாய் வந்தவங்கள் நேர போய் கே.கே.எஸ் றோட்டில சிவாஸ் ஸ்ரோர்கடையத்தாண்டி இருப்பினம் எண்டு நெக்கிறன், திருப்பியும் சுடுபாடு தொடங்கிச்சிது. சத்தம் உச்சம் தொட செல்லடியும் தொடங்கிச்சிது. கொஞ்ச நேரத்தால திருப்பியும் உள்ள வந்தவங்கள் முன்னுக்கு நிண்டு சனங்களுக்கு வேலை செய்து கொண்டிருந்த பெரிய பெடியளை கூட்டிக் கொண்டு போனாங்கள், என்னத்துக்கு எண்டு கேக்கப்போனா காயப்பட்ட ஆக்களைத் தூக்கவாம் எண்டு பதில் வந்திச்சது. திருப்பியும் இரவிரவா அடிபாடு நடந்தது. அடிச்சதில சிலதுகள் பள்ளிக்கூடத்துக்குள்ளையும் விழுந்து ரெண்டு பேர் செத்தது காலமை தான் தெரிஞ்சிது. சத்தமே இல்லாமல் அடுத்த நாள் காலமை வந்திச்சுது. இரவிரவா மூச்சையேஅடக்கி இருந்த எங்களுக்கு ஒண்டையும் ரெண்டையும் அடக்கிறது கஸ்டமாத் தெரியேல்லை. எண்டாலும் சத்திய சோதனையாக பெஞ்ச மழை எங்கடை பொறுமையை சோதிக்கத் தொடங்கிச்சுது. சத்தியிமா பொம்பிளைகள் எல்லாம் என்ன செய்தவை எண்டு ஞாபகம் இல்லை. Hostel குசினீப் பக்கம் இருந்த மதிலை அந்த வீட்டுக்கார சனமே உடைச்சு ஆக்களை வீட்டை விட்டதாக ஞாபகம். சீனீ போட்ட Maliban nice , lemon puff பிஸ்கட்டும் பிளேன் ரீயும் மூண்டு நேர உணவாகியது.

மூண்டாம் நாள் கழிய விடிய கொஞ்சம் பெரிய தலைகள் வந்து பெருந்தலைகளோட கதைச்சனம். சாப்பாடு குடுக்க வைச்சிருந்த பதிவுகளை எல்லாம் பாத்திட்டு பத்து வயதுக்கு மேற்பட்ட எல்லா ஆம்பிளைகளையும் மைதானத்திற்க்குக்கு வரச் சொன்னாங்கள். அதோட குறிப்பிட்ட எல்லைக்குள்ள இருக்கிற வீட்டுக்கு பொம்பிளைகளை மட்டும் போய் வரலாம் எண்டு சொன்னதை பல அம்மாமார்

26 ஆம் பக்கம் பார்க்க...



அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்




> இலங்கை ஏற்கனவே பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்கும் வேளையில் திடீரென அதிபர் கோட்டாபயவுக்கும் மஹிந்தவுக்கும் எதிரான மக்கள் போராட்டம் நாளுக்கு நாள் வலுப்பெற்று வருகின்றன. இந்த போராட்டத்தை பலவீனப்படுத்த அவசரநிலை மற்றும் மேலதிக கட்டுப்பாடுகள் அமல்படுத்தப்பட்டன. ஆனாலும் பொதுமக்கள் இந்த தடைகளை பொருட்படுத்தாமல் வீதிகளில் இறங்கி போராடினார்கள்

# உகாண்டா கரன்சியுடன் இலங்கையில் இருந்து சென்ற விமானங்கள்

## பின்னணி என்ன?

இலங்கையில் இருந்து பெரும் தொகை மதிப்புள்ள நோட்டுகள் உகண்டா நாட்டுக்கு கொண்டு செல்லப்பட்ட விவகாரத்தில் வெளிவரும் இரு வித தகவல்களால் நாட்டில் சர்ச்சை நிலவி வருகிறது. அங்கு ஆளும் அரசுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்கள், சமூக ஊடக பக்கங்களில் இது பற்றிய தங்களுடைய சந்தேகங்களை பகிர்ந்து வருகின்றனர்.

இலங்கையில் ஆளும் ராஜபக்ஷ அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர், 2021ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம், ஶ்ரீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான 3 சரக்கு விமானங்களின் மூலம் 102 டன் கரன்சிகள் உகண்டாவிற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாக தகவல் பரவி வருகிறது.


SriLankan Airlines @flysrilankan

Cargo flights to Uganda in February 2021(4/5) - the Ugandan government ordered Ugandan currency notes from a global security printer who operates several factories worldwide, including one in Sri Lanka, exporting to global markets.

6:22 PM - Apr 14, 2022

இந்த விவகாரத்தில், கொழும்பு கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து, உகண்டாவின் என்டெபே சர்வதேச விமான நிலையத்திற்கு பணத்துடன் கூடிய சரக்குக் கலன்கள் கொண்டு செல்லப்பட்டதாக ஶ்ரீலங்கன் விமான சேவை தெரிவித்துள்ளது.

அது முழுமையான வர்த்தக நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்ட சேவைகள் எனவும், கொரோனா பெருந்தொற்று காலத்தில் பிரிட்டனைச் சேர்ந்த சரக்கு கையாளும் நிறுவனதுக்காக தங்களுடைய விமானங்கள் குத்தகைக்கு விடப்பட்டிருந்த காலகட்டத்தில் உகாண்டாவுக்காக அச்சடிக்கப்பட்ட அந்நாட்டின் கரன்சிகள் இடம்பெற்ற நோட்டுகள் அடங்கிய கலன்கள் பயணிகள் விமானம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டதாக ஶ்ரீலங்கன் விமான நிறுவனம் கூறியுள்ளது.

இந்த விவகாரத்தில் பிரிட்டனைச் சேர்ந்த நாணயம் அச்சிடும் நிறுவனமான டே லா ரூ (DE LA RUE), அதன் ட்விட்டர் பக்கத்தில் ஹுந டுய சுரந உலகெங்கிலும் உள்ள நாடுகளின் மத்திய வங்கிகளில் பாதிக்கு மேலானவற்றுக்கு அவற்றின் நோட்டுகளை வழங்குகிறது. இலங்கை, கென்யா, மால்டா, பிரிட்டன் ஆகிய நாடுகளில் உள்ள எங்கள் தளங்களில் இருந்து, சம்பந்தப்பட்ட நாடுகளின் பொருளாதாரத்திற்கு பங்களிக்கும் வகையில் இலங்கை மற்றும் கென்யாவில் உள்ள கூட்டு நிறுவனங்கள் மூலம் நாங்கள் இதைச் செய்கிறோம். வாடிக்கையாளர்களைப் பற்றி நாங்கள் கருத்து தெரிவிப்பதில்லை என்று கூறியுள்ளது.

சந்தேகம் எழுப்பும் அரசியல்வாதிகள் இருப்பினும், இந்த இரு நிறுவனங்களின் விளக்கத்தால் சில அரசியல்


De La Rue @DeLaRuePlc

De La Rue provides banknotes for half of the central banks around the world. We do this from our sites in Sri Lanka, Kenya, Malta and the UK, with joint ventures in Sri Lanka and Kenya that contribute to the economies of those countries. We do not comment on our customers.

10:53 AM - Apr 15, 2022

கட்சிகள் சமாதானம் அடையவில்லை.உகண்டாவிற்கு தேவையான பணத்தை அச்சிட இலங்கைக்கா வர வேண்டும் என முன்னிலை சோசலிச கட்சியின் பிரசார செயலாளர் துமிந்த நாகமுவ கேள்வி எழுப்பியுள்ளார். உகண்டாவுடன் இந்த கொடுக்கல் வாங்கல் மாத்திரமல்ல, மேலும் பல கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்றதாகவும் அவர் குறிப்பிடுகிறார். நாட்டில் தற்போது காணப்படும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில், இலங்கையிலுள்ள அரசியல்வாதிகள் சிலர், தமது சொத்துக்களை வெளிநாடுகளுக்கு

28 ஆம் பக்கம் பார்க்க...






07 ஆம் பக்கத் தொடர்ச்சி...

# கடன் சூழ் உலகம்

ஒரு பிழைப்பா? என சொல்பவர்களின் கூற்றில் நியாயமில்லாமல் இல்லை. கடன் வாங்கி ஊதாரித்தனமாக செலவு செய்து நடுத் தெருவுக்கு வந்தவர்களும் எண்ணிக்கையில் அதிகம்தான். இதனால்தானோ என்னவோ கடன் தவறு என நினைப்பவர்களுக்கு முதலில் நினைவுக்கு வருவது இதுபோன்ற ஊதாரிகளே. கடமைகளை நிறைவேற்ற கடன்வாங்கி பின் சிரமப்படுபவர்களும் கடன் என்றாலே தொல்லைதான் எனக்கருதி புலம்பிதள்ளுவதுண்டு. ஆனால், கடன் என்பதே ஒரு சமூகத் தீமைதான் என்பது போல் பார்க்கப்படுவது எந்தளவு சரியானது ?





## கடனின் இன்றியமையாமை தற்கால சூழலில்!

மிகவும் உயரிய அந்தஸ்தில் இருப்பவர்கள் முதற்கொண்டு, அடித்தட்டு மக்கள்வரை,எத்தனைபேர் “கடன்“ என்ற விடயத்தை பயன்படுத்திக்கொண்டிருக்கிறார்கள், இனியும் பயன்படுத்தப்போகிறார்கள்! இன்று சமூகத்தில் நிமிர்ந்து நிற்கும் எத்தனை மிகப்பெரிய நிறுவனங்களின் வளர்ச்சியில் கடனின் பங்களிப்பு இருந்து கொண்டிருக்கும்? எல்லோருமேயென்ன கையில் முழு மூலதனத்துடனா தொழில் ஆரம்பித்திருப்பார்கள்? எத்தனை தொழில் முனைவோர்க்கு, நிறுவனங்களின் வளர்ச்சிக்கு இந்த கடன் என்ற விடயம் கைகொடுத்திருக்கும்? உரிய நேரத்தில் அந்த உரிய தொகை கிடைத்திராவிட்டால் ? கடன் என்ற ஒன்று இல்லையென்றால் இலட்சக்கணக்கான மத்யதரக் குடும்பங்கள் வீடு கட்டியிருக்க முடியாது. தானும் ஒரு வாகனத்துக்கு உரிமையாளனாக வேண்டும் என்ற ஆசைகள் ஈடேறியிராது. வாழ்க்கையில் தேவை ஏற்படும்போது கடன் வாங்கவேண்டிய சூழ்நிலை உருவாகுகிறது. இன்றெல்லாம் படிப்பதற்கே கடன் வாங்க-வேண்டிய சூழ்நிலை. படித்து முடித்தபின் முதல் சம்பளத்திலிருந்தே கடனை திருப்பிச் செலுத்தவேண்டிய நிர்பந்தம் இருந்தாலும், பணம் இல்லை என்ற ஒரே காரணத்திற்காகவேநன்றாகபடிக்கக்கூடிய ஒருமாணவன் தன்னுடைய கல்வியினை பாதியில் கைவிட வேண்டியதில்லையே? கல்விக் கடன் என்ற பெயரில் வங்கிகள் கைகொடுப்பதனைகூட நிராகரித்து,இல்லை இல்லை நாங்கள் கடன் வாங்கிப் படிக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை என மறுப்பின் அது மிகப்பெரிய முட்டாத்தனமன்றோ ?

கடன் ஏன் வாங்குகிறோம் ? என்ற கேள்விக்கு “பற்றாக்குறைதான் “ என்று சொன்னால், அதுமட்டுமே சரியான பதிலாக இராது. ஏழைகள் மட்டும்தானா கடன் வாங்குகிறார்கள் ? மிகப்பெரிய செல்வந்தர்களும்கூட தொழில் முன்னேற்றத்திற்காக கடன் என்கிற பாதையை தேர்ந்தெடுக்கிறார்கள் அல்லவா ? ஆக, ஒவ்வொருவருக்குமே கடன் வாங்குதலை நியாயப்படுத்துவதற்கான ஏதேனும் ஓர் காரணம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால், இங்கே “நியாயமான காரணம்“ என்ற ஒன்றை நாம் மனத்தில்கொள்ளவேண்டும்! அப்படியாயின் நியாயமான காரணங்களுக்காக கடன் வாங்கலாமென்றால், எவையெல்லாம் நியாயமான காரணங்கள் ? காரணங்கள் என்று சொல்வதைவிட சூழ்நிலைகள் அல்லது தருணங்கள் என்று சொல்வதே இன்ன மும் பொருத்தமானதாக இருக்கும். இக்கட்டான நிலையொன்றில் ஏதாவது செய்து நிலைமையை சமாளிக் காவிட்டால் ஒருவரின் வாழ்க்கை அல்லது தொழில் அல்லது எதிர்காலம் மொத்தமுமே அழிந்துவிடக்கூடிய ஆபத்தான கட்டத்தில் ஒருவருக்கு கடன்தான் கடவுள்! கடன் தருகிறவர்கள்தான் உண்மையில் வரம்கொடுக்கும் கடவுள். “கடவுளாட்டம் வந்து காப்பாத்தினீங்க, உயிர் இருக்கறவரைக்கும் இந்த உதவிய மறக்க மாட்டம்“ என, அடி மனதிலிருந்து வெளிப்படுகின்ற இந்த வாக்கியத்தை எத்தனைமுறை கேட்டிருப்போம் , சொல்லியிருப்போம்? இன்றைய கடன் நாளை ஏட்படவிருக்கும் பெரிய இழப்பினை சரிசெய்யும் என்றால் நிச்சயம் இந்த இடத்தில கடன் தவறில்லையே? உதாரணதிற்கு திடீர் விபத்தொன்று ஒப்பரேஷனுக்கு உடனே பணம் கட்டியாகவேண்டும் இல்லை உயிர்பிழைப்பது கஷ்டம் என்ற நிலையிலோ, ஸ்கூல் பீஸ் கட்டாவிட்டால் நாளை பரீட்சை எழுதமுடியாது நிலை குழந்தையின் ஒரு-வருடப்படிப்பு வீணாகும்நிலை இந்த இடத்தில என்ன முடிவெடுக்க முடியும் நம்மால்? எப்படியாவது கடனை வாங்கியேனும் அப்போதைய நிலைமையினை சமாளிக்கத் தோன்றும் இல்லையா? பிரச்சினை என்பது கடன்படுத்தலில் அல்ல, மாறாக வாங்கிய கடனை சரியான முறையில் திருப்பிச் செலுத்தவேண்டும் என்கிற எண்ணமும் உத்வேகமும் தேவை முடிந்தபின் இல்லாமல்போவதுதான் இங்கு பலரிடத்தில் காணப்படும் பிரச்சினையே !

நான் வாசித்த ஓர்விடயமதனையும் இங்கே பகிர்ந்துகொள்கிறேன், அதாவது “செலவு மேலாண்மை யின்படி வெற்றிகரமான நிதி “ஆலோசகர்“ யார்..? என்ற கேள்விக்கு, எவர் ஒருவர், தான் பணிபுரியும் நிறுவனத்துக்கு, அதிக அளவில் பல முனைகளில் இருந்தும் கடன் பெற்றுத் தருகிறாரோ, அவர்தானாம்



வெற்றிகரமான நிதி ‘ஆலோசகர்‘.நம்மிடம் இருக்கிற நிதியை வைத்துக் கொண்டு, அதற்குள் ‘வியாபாரத்தை‘ நடத்திக் கொண்டு, சிறிது சிறிதாக வளர்ந்தால் போதும் என்கிற எண்ணம், நவீன மேலாண்மைச் சிந்தனையாளர்களைப் பொறுத்தமட்டில், பிற்போக்குத் தனமானதாம். “பிசினஸ/ன்னாலே, ரிஸ்க்குதானே..? அப்புறம்..?கடன் வாங்கறதுக்குப் பயந்தா, பொட்டிக் கடையிலயே, வாழ்நாள் முழுக்க முடங்கிக் கிடக்க வேண்டிய துதான்“ என்று யாரேனும் சொன்னால், “வீராப்பு“ பேசுகிறான் என்று ஒதுக்கிவிட முடியாது. தனது வியாபாரத்தில், அடுத்தநிலைக்குத் தாவத் தயாராக இருக்கிறான் என்று பொருள் என பொருளாதாரநிபுணர் கள் கருதுகிறார்கள்.

கடன் வாங்குவதும் அதைச் சரியாகத் திருப்பிச் செலுத்துவதும், அது தீர்ந்ததும் அல்லது அதற்கும் முன்னதாகவே மேலும் வாங்குவதும்... ஒரு சங்கிலித் தொடர் நடவடிக்கை போன்றது, வியாபாரமாக இருந்தாலும், குடும்பம் சார்ந்ததாக இருந்தாலும், முன்னேற்றத்துக்கான அடுத்தப் படிக்கு நம்மை அழைத்துச் செல்வதில், “கடன்“ போன்ற சிறந்த சாதனம் இல்லை. “மொத்தமாக கையில் வச்சிக்கிட்டு, ரொக்கமா குடுத்து வாங்கவேண்டும“ என்று யார் சொன்னாலும் அந்த மனிதரை, இன்றைய பொருளாதாரச் சிந்தனையாளர்கள், ஒரு பித்துக் குளியாகத்தான் பார்ப்பார்கள். “கண்ணை மூடிக்கொண்டு“ கடன் வாங்கச் சொல்லவில்லை. முயற்சித்தால் கிடைக்கும் அதன் மூலம், நல்ல எதிர்காலம் அமையும் என்றால், அந்த வாய்ப்பை ஏன் நிராகரிக்க வேண்டும்? நீண்ட கால நன்மைக்கு, மதிப்பு கூடிக்கொண்டே போகிற ஒரு சொத்துக்கு, இன்று நாம் கடன் பெறுகிறோம் என்றால், என்ன தவறு இருக்க முடியும்...?

## நல்லதா, கெட்டதா?

கடன் குறித்த இந்தக் கேள்விக்கு நேரடியாக பதில் சொல்லிவிட முடியாது. அது தேவையை பொறுத்தது. அத்தியாவசிய தேவை, ஆடம்பர தேவை இதைப் பொறுத்துதான் கடன் வாங்குவது நல்லதா கெட்டதா என்பதை முடிவு செய்ய முடியும் என்பதுதான் நிதி ஆலோசகர்களின் கருத்து. மார்க்கெட்டிங் வேலையில் இருக்கும் ஒருவருக்கு பைக் அவசியமானதாக இருக்கும். அவரது தொழிலில் நீடிக்க முடியும். வருமானம்அதிகரிக்க முடியும்என்கிற நிலையில் வாகனக் கடன் அவசியமாகிறது. அதே நேரத்தில் வருமானத்தில் பல கடன்கள் இருந்து கொண்டிருக்கும் நிலையில் ஒரு நடுத்தர குடும்பம் வாகனக் கடன் வாங்க ஆசைப்படுவது வருமானத்துக்கு மீறியது. சுற்றுலா செல்ல வேண்டும் என்று தனிநபர் கடன் வாங்கினால் அது சுமையாக மாறிவிடும்.கடன் குறித்த பயமும், பயன்பாடும் இப்படித்தான் புரிந்து கொள்ள வேண்டும் என்கிறார்கள் நிதி ஆலோசகர்கள். அதாவது நமது வருமானத்தை முன்கூட்டியே செலவு செய்து கொண்டிருக்கிறோம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

## இருபுறமும் கூர்மையான கத்தி

கடன் வாங்கவேண்டும் என்று முடிவெடுப்போமாயின், மிகவும் நிதானத்துடனும் பொறுப்புணர்வுடனும் முடி வெடுக்க வேண்டும். காரணம், கடன் இருபுறமும் கூர்மையான கத்தி போன்றது. பார்த்து கவனத்துடன் கையாள வேண்டும். கடன் வாங்கி ஊதாரித்தனமாக செலவு செய்யக்கூடாது எனும் கருத்தை வலியுறுத்தும் பொருட்டு “கடனே கூடாது “என்று கூறப்படுமாயின், “கத்தியால் காயம்படும், கொலைக்குரிய கருவி என்பதால் கத்தியை பயன்படுத்த மாட்டேன் “ என்பதற்கு ஒப்பானதே.

26 ஆம் பக்கம் பார்க்க...




அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்

கே.எஸ்.சுதாகர்



# 'முள்ளும் மலரும்' திரைப்படம்



## பிளாஷ்பேக்

முள்ளும் மலரும் திரைப்படம் 1978 ஆம் ஆண்டு வெளிவந்தது. ஆயினும் 1980 மட்டில் தான் எனக்கு அந்தப் படத்தைப் பார்க்கும் சந்தர்ப்பம் கிட்டியது. தெல்லிப்பழை துர்க்கா தியேட்டருக்கு அப்பொழுதுதான் முள்ளும் மலரும் வந்திருக்க வேண்டும். அந்தக் காலத்தில் மனதை ஒரு உலுப்பு உலுப்பி உறங்கவிடாமல் செய்த திரைப்படம் இது. இல்லாவிட்டால் துர்க்கா சினிமாத் தியேட்டரின் அருகேயிருந்த நூல்நிலையத்திற்கு ஒரு பைத்தியக்காரன் போல அடிக்கடி சென்றிருப்பேனா? நூல்நிலையத்தையும் தியேட்டரையும் பிரித்து நிற்கும் வேலிக்குள்ளால் பாய்ந்து வரும் பாடல்களையும், திரைக்கதையை நினைவூட்டும் இசைவெள்ளத்தையும் காது குடுத்துக் கேட்பதில் ஒரு அலாதி இன்பம் பிறக்கும். அடிக்கடி வேலிக்கருகே நின்றால் பைத்தியம் பிடித்துவிட்டதென ஆக்கள் நினைத்துவிடுவார்கள் என்பதற்காக இடையிடையே லைபிறறிக்குள் சென்று பேப்பரைப் புரட்டுவேன். ஆனால் மனம் தியேட்டருக்குள் குதித்து நிற்கும். உறி அடிக்கும் காட்சி, விஞ் இயங்கும் காட்சி, உறக்கத்தில் இருக்கும் வள்ளிக்கு காளி மருதாணி இடும் காட்சி என இசைவெள்ளம் என்னை மீளவும் வெளியே கொண்டுவந்துவிடும். அது நடிகர்களின் தனித்தன்மை வாய்ந்த குரல், அவர்களின் தோற்றத்தை என் மனக்கண் முன் கொண்டுவந்துவிடும்.

ஹமுள்ளும் மலரும்' கல்கி இதழ் நடத்திய வெள்ளிவிழா நாவல் போட்டியில் உமாசந்திரன் எழுதி முதல் பரிசு பெற்ற நாவல். இயக்குநர் மகேந்திரனின் இயக்கத்தில் ரஜனிகாந் (காளியண்ணன/திரைப்படத்தில் காளி), சரத்பாபு (குமரன்),ஷோபா (வள்ளி), படாபட் ஜெயலட்சுமி (மங்கா) போன்றோர் முன்னணிக் கதாபாத்திரமேற்று நடித்தார்கள். நாவலில் முனியாண்டி, மாயாண்டி, அங்காயி என்ற பாத்திரங்கள் வருகின்றன. திரைப்படத்தில் குழப்பம் வருவதைத் தவிர்க்கும் முகமாக முனியாண்டிக்கு முருகேசன் என்ற பெயர் குடுக்கப்பட்டுள்ளது. முருகேசனாக வெண்ணிறாடை மூர்த்தி நடித்திருப்பர். படத்தை பாலு மகேந்திராவின் கமராவும், இளையராஜாவின் இசையும் உச்சிக்கு எடுத்துச் சென்றன.

ஒரு தடவை இயக்குனர் மகேந்திரன் படித்துக் கொண்டிருந்த காரைக்குடி அழகப்பா கல்லூரிக்கு எம்ஜிஆர் வந்திருந்தார். அவர் முன்னிலையில் மேடையேறிப் பேசிய மகேந்திரன் அப்போதைய சினிமாவின் நாடகத் தனத்தை வெளிப்படையாகச் சொல்லியிருந்தார். அவரின் பேச்சில் கவர்ந்த எம்ஜிஆர், மூன்று நிமிடங்கள் மட்டுமே பேச நேரம் வழங்கப்பட்டிருந்த மகேந்திரனை அரைமணி நேரம் பேசச் செய்திருந்தார். பின்னாளில் தான் இயக்கிய முள்ளும் மலரும் திரைப்படத்தை எம்.ஜி.ஆ.ருக்கு பிரத்தியேகக் காட்சியாகக் காண்பித்தபோது, எம்ஜிஆர் அவரைக் கட்டித்முவி இதுவல்லவோ திரைப்படம்' என்று பாராட்டினார்.

முள்ளும் மலரும் நாவலை பாதிவரை காளியண்ணன் ஒரு புலிக்கு கையை இழக்கும் அத்தியாயம் வரை படித்த மகேந்திரன் அத்தோடு நிறுத்திவிட்டு திரைக்கதை எழுத ஆரம்பித்துவிட்டார். மேலும் தனது சொந்த விருப்பத்திற்கு ஏற்ப திரைக்கதையை முழுமையாக உருவாக்கினார்.

ரஜனிகாந்த் இந்தப்படத்தில் ஒரு வித்தியாசமான நடிப்பைக் குடுத்திருப்பார். அதே போல பாத்திரங்களைத் தேர்ந்தெடுத்து அவர் தொடர்ந்தும் நடித்திருந்தால், இன்று அவரின் நடிப்பில் இன்னொரு பரிமாணத்தைக் கண்டிருக்கலாம். சரத்பாபு, சோபா. படாபட் போன்றவர்களும் வெகு சிறப்பாக நடித்திருந்தார்கள். குறிப்பாக சோபாவின் குழந்தைத்தனமான நடிப்பு, முகபாவனைகள். அவரது அழுகை இன்னமும் மனதில் வலியைத் தரும்.

படத்தின் ஆரம்பக் காட்சிகள், பாத்திரங்களின் அறிமுகம் வெகு சிறப்பாக இருந்தன. ஒரு தொழிலாளியின் உழைப்புக்கு ஊதியம் குடுக்காமல் ஏமாற்றும் ஒருவரின் கார் விளக்கைக் கல்லால் உடைக்கும் காளி, அதைத் தூரத்தே நின்று பார்த்துவிடும் குமரன் ஆற்றின் கரையில் இருந்து மீன் வெட்டும் வள்ளி, ஊருக்குப் புதிதாக வந்திருக்கும் மங்கா தன் தாயுடன் எதிரே இருந்து மீனைப் பார்த்துச் சப்புக் கொட்டும் காட்சி' காளி, மங்காவை தனது வீட்டிலே விடுத்து விடுத்துப் பார்க்கும்போது, ஹமுன்னபின்ன நீ ஒரு பெண்ணைப் பாத்ததில்லையா?' என மங்கா காளியைப் பார்த்துக் கேட்கும் கேள்வி என – ஒரு திரைக்கதையின் இலக்கணமாக ஆரம்பத்திலேயே படத்தில் வரும் பாத்திரங்களைத் தெளிவாகக் காட்டி விடுகின்றார் மகேந்திரன். காளிக்கும் இஞ்சினியர் குமரனுக்கும் ஒருபோதும் ஒத்து வராது. கடைசிக் காட்சியில் கூட, "இப்ப என் தங்கைச்சியை உங்களுக்கு மனைவியாக்க சம்மதிக்கிறேன். ஆனா இப்பவும் உங்களை எனக்குப் பிடிக்கேல்ல சார்" எனக் காளி சொல்வான். அதுதான் காளி. இந்தக் காட்சி படமாக்கப்பட்டபோது ஒரு சுவையான சம்பவம் நடந்ததாக மகேந்திரன் குறிப்பிடுவார். படப்பிடிப்பில் அந்தக் காட்சி படமாக்கப்பட்டபோது திடீரென சரத்பாபு காணாமல் போயிருந்தாராம். அவரை மேட்டுப்பாளயம் ரயில் நிலையத்தில் இருந்து பிடித்து இழுத்து வந்தாராம் தயாரிப்பாளர். "அது எப்படி இப்பவும் என்னைப் பிடிக்கேல்ல என்று காளியால் சொல்ல முடியும்?" என்பதே அவர் கோபம். அந்த அளவிற்கு படத்துடன் ஒன்றிப் போயிருந்தார் சரத்பாபு.

படத்தில் வரும் ஹசெந்தாழம் பூவில்', அடி "பெண்ணே' ஆகிய இரண்டும் அருமையான காட்சியமைப்புக் கொண்டவை, என்றும் இனிமையானவை. ஹசெந்தாழம் பூவில்' பாடல் காட்சி பற்றிக்கூட ஒரு சுவையான சம்பவம் உண்டு. அந்தக் காட்சியை எடுப்பதற்கு படத்தின் தயாரிப்பாளர், இயக்குனர் மகேந்திரனுக்கு மறுப்புத் தெரிவித்திருந்தாராம். அந்தச் சந்தர்ப்பத்தில் கமலஹாசன் தலையிட்டு தன் சொந்தப் பணத்தில் கமரா ஒன்றை வாடகைக்கு எடுத்துக் குடுக்க, பாலுமகேந்திரா அந்தப் பாடல் காட்சியைப் படமாக்கினார். அந்தப் பாடல் இல்லாமலிருந்தால், படம் குறைப்பிரசவம் ஆகியிருக்கும் என்கின்றார் மகேந்திரன். உண்மைதான். அந்தக் காட்சி இல்லாமலிருந்திருந்தால் கதை நிகழும் களத்தை தெளிவாக ரசிகர்களின் முன்னால் கொண்டுவந்திருக்க முடியாது. வள்ளிக்கும் குமரனுக்குமிடையே துளிர்க்கும் காதலைக் காட்ட அந்தப் பாடல் காட்சி ஒன்றே போதும்.

'அடி பெண்ணே' என்ற பாடலில் ஹவானத்தில் சில மேகம / பூமிக்கோ ஒரு தாகம் / பாவை ஆசை என்ன' என்றொரு வரி வரும். அந்த வரிகள் இளம் வயதிலே தற்கொலை செய்துகொண்ட நடிகைகள் சோபா, படாபட் ஆகியோருக்கான ஹகட்டியம்' கூறும் வார்த்தைகளாகவே பார்க்க முடிகின்றது.

சிறந்த கதை, இசையமைப்பு, ஒளிப்பதிவு, பாடல்களுக்காக 'முள்ளும் மலரும்' அன்றிலிருந்து இன்றுவரை என்னைக் கவர்ந்து கொண்டே வருகின்றது.












# அவளைக் காதலிக்காதீர்கள்...

Martha Rivero-Garrido

தமிழாக்கம் : கவிதா லட்சுமி (நோர்வே)

வாசிப்பை வழமையாகக் கொண்ட
பெண் மீது காதல் வயப்படாதீர்கள்.

உணர்வுகளை ஆழமாக
அனுபவிக்கத் தெரிந்த,
எழுதவும் கூடிய பெண்ணுடன்
காதல் கொள்ளாதீர்கள்.

கற்கையை வழிமுறையாக்கியவளிடமும்
மாயம் செய்யும்
உன்மத்தப் பிச்சி ஆனவளிடமும்

சிந்திக்கத் தெரிந்தவளும்,
தன்னை அறிந்தவளும்,
சிறகு விரித்தெழும் வித்தைக்காரியும்,
மனவுறுதியும் கொண்டவளுமான
பெண்ணுடன் காதல் வயப்பட்டு
விடாதீர்கள்.

கலவியின் உச்சத்தில்
சிரித்துக் கொண்டிருப்பவளிடமோ
கண் கலங்கிப் போகுபவளிடமோ
காதல் கொண்டு விடாதீர்கள்.

உடலையே உயிராக்கத் தெரிந்தவளிடம்,
கவிதைகளைக் காதலிப்பவளிடம்
(இவளே அனைத்திலும்
பேராபத்தானவள்),
ஒரு ஓவியத்தில்
அமிழ்ந்து போக்கக் கூடியவளிடம்,
இசையின்றி வாழ்வில் இயையாதவளிடம்,
காதலுற்று விடாதீர்கள்.

அரசியல் ஆர்வமுள்ளவளிடம்,
அநீதிகளுக்கெதிராய் நிற்கத்தெரிந்த
கலகக்காரியிடம்
காதல் வயப்படாதீர்கள்.

தொலைகாட்சியில்
தன்னை இழக்காதவளும்,
உடலழகைக் கடந்த
பேரழகு மிளிரும் பெண்ணுடன்
காதல் கொண்டுவிடாதீர்கள்

தீவிரமும் தெளிவுமுள்ள
அலட்சியப் பேர்வழியான
ஒரு குறும்புக்காரியை
காதலித்து விடாதீர்கள்.

இப்படிப்பட்ட பெண்ணிடம்
காதல் வயப்படுவதை
நீங்கள் விரும்பவும் மாட்டீர்கள்.

ஒருவேளை அவள் மீது நீங்கள்
காதல் கொண்டு விட்டீர்களெனின்...

அவள் உங்களோடு
இருக்கின்றாளோ இல்லையோ...
காதல் செய்கிறாளோ இல்லையோ...

அந்தப் பெண்ணிடமிருந்து உங்களை
மீளப் பெற முடிவதேயில்லை.




குரும்பையூர்
த.ஐங்கரன்
(இலங்கை)

# மே ஒன்று மெய்யொன்று சொல்லட்டும்!

தொழிலாளர்களின் தோள்கள்
விசுவாசங்களால்
விலை பேசப்படுகின்றன.

முதலாளி முதலைகள்
இரைகள் மீது
இரக்கம் கொள்வதில்லை.

எலும்புகளில்
இரும்பு செய்யும்
எகாதிபத்தியம்
கரும்பு தின்னக்கூலி
கேட்குமா?

விறகு விற்பவன்
வீட்டில்
விறகு அடுப்பு எரிவதில்லை.

சிறகுகளை
கொடுத்து விட்டு
பாவம் பறக்கின்ற
கனவுகளுடன் ....

இயற்கையை சமப்படுத்திய
இறைவன்
இயலுமையையும்
சம்ப்படுத்தியிருக்கலாம்.

அதுசரி, அங்கே

சுகமாய்ச் சுற்றி
மாம்பழம் பெற்றதும்

சுற்றி அலைந்தும்
மாம்பழம் பெறாததும்
சூட்சுமம் தானே.

நாரதர்கள்
நாடுகளிலும் இருக்கிறார்கள்.

எஞ்சியது
கோவமும்
கோவணமும் தான்.

கூலி வாங்குபவன்
கூனி வாங்கவேண்டும் என்ற
குறுகிய நோக்கு
மாறி நாளானது.

உழைப்பு ஒருநாள்
இளைப்பாற எண்ணிவிட்டால்
பிழைப்பு நாறும்.

மூலப்பொருளுக்கும்
முடிவுப் பொருளுக்கும்
பாலம் போடுபவன்
பாட்டாளி.
மே தினத்தின் கூட்டாளி.




அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்

# யேர்மனியில் சிறப்பாக இடம்பெற்ற
# செல்வி அபிரா ரவீந்திரநாதன் அவர்களின் அரங்கேற்றம்!





Photo:- Vithu Photography




அபிரா ரவீந்திரநாதன் அவர்களுக்கு வெற்றிமணி வளர்கலை விருது வழங்கி கௌரவித்தது.





யேர்மனியில், கடந்த சனிக்கிழமை 02.04.2022 செல்வி அபிரா ரவீந்திரநாதன் அவர்களின் பரத நாட்டிய அரங்கேற்றம் வெகு சிறப்பாக வூப்பெற்றால் நகரில் வூப்பர் மண்டபத்தில் நடைபெற்றது.

இவர் நாட்டிய கலாஜோதி திருமதி யனுஷா பிரதீப் அவர்களின் மாணவியும், திரு, திருமதி ரவீந்திரநாதன் அவர்களின் புதல்வியும் ஆவார்.

பிரதம விருந்தினராக சூரிச் திருக்கோணேஸ்வரர் நடனாலயம் திருமதி டாக்டர் மதிவதனி சுதாகரன் அவர்களும், சிறப்பு விருந்தினராக நாட்டியக்கலா ரத்னா, சாவித்திரி சரவணன் MA M. phil அவர்களும்,கௌரவ விருந்தினராக, வயலின் ஆசிரியை, இசைக்கலைமணி திருமதி பாலஜோதி அமிர்தலிங்கம், அவர்களும், வெற்றிமணி பத்திரிகை பிரதம ஆசிரியர் மு.க.சு.சிவகுமாரன் அவர்களும்,ஸ்ரீமதி. துஷ்யந்த் ஜெகதீஸ்வரன், அவர்களும், கலந்து சிறப்பித்தனர்.

**யேர்மனியில் பரதக்கலைக்கு நல் அறுவடைக்காலம் விதைத்தவர்களை நினைவில் நிறுத்துவோம்.**

**வெற்றிமணி மு.க.சு.சிவகுமாரன்**

28 ஆம் பக்கம் பார்க்க...




அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்




அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்




# எந்த நம்பிக்கையில் நாங்கள் கை கோர்ப்பது?

## ஆனால் மாற்றம் ஒன்றே வழி!

யுத்தம் முடிவடைந்த கடந்த 13 வருடங்களில், எங்கள் அரசியல்வாதிகளாலோ, சர்வதேசத்தாலோ, ஏன் யுத்தத்தை முடிக்க முன்னின்று உதவிய இந்தியாவோலோ, எங்களுக்கு எந்த தீர்வையும் பெற்றுத்தர முடியவில்லை. எங்களுக்கு கிடைத்த மாகாண சபைகளையும், மாநகர சபைகளையும் கூட எங்களால் திறம்பட நடாத்தி எங்களது மக்களுக்கு குறைந்தபட்ச விமோசனத்தை வழங்கக் கூட எங்களால் முடியவில்லை.

இந்தச் சூழ்திலையில், நவம்பர் 2019 இல் அதிகப்படியான பெரும்பான்மை பலத்துடன் ஆட்சிக்கு வந்த கோத்தாவின் அரசு எங்களுக்கு மீண்டும் ஒரு நீண்ட இருண்ட யுகத்தை கட்டியம் கூறி நின்ற வேளையில் தான், கோத்தா அரசு இலங்கையின் பொருளாதாரத்தை தனது நடவடிக்கைகளால் சிதைத்து முழு நாட்டு மக்களதும் வயிற்றில் அடிக்கத் தொடங்கியது. இலங்கையின் பொருளாதாரம் அதள பாதாளத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்க, சிங்கள மக்கள் கிளர்ந்தெழுந்து தாமாக வீதியில் இறங்கிப் போராடத் தொடங்கினார்கள். எந்தவித அரசியல் கட்சிகளினதும் இயக்கங்களதும் முன்னெடுப்பில்லாமல், சாதாரண மக்கள் தாமாக வீதியில் இறங்கி அமைதியான முறையில் அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்துவது உலக வரலாற்றில் ஒரு புதுமையான புரட்சியாகவே பார்க்கப் படுகிறது.

சிங்கள ஊடகங்களிலும், சமூக வலைதளங்களிலும் இந்தப் போராட்டத்தின் பின்னணியை அவதானிக்கும் பொழுது இது கோத்தா என்ற ஒற்றை நபருக்கு எதிரான போராட்டமாக அல்லலாமல், முழு அரசியல்வாதிகளுக்கும் எதிரான, ஒரு புதிய அரசியல் – சமூக – பொருளாதார மாற்றத்திற்கான கிளர்ச்சியாகவே அவர்கள் இந்த மக்கள் எழுச்சியை முன்னிறுத்துகிளார்கள். இலங்கை



எதிர்நோக்கும் உடனடிப் பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வாக, இந்தப் பிரச்சினைகளிற்கு அடிகோலிய ஜனாதிபதி கோத்தபாய இராஜினாமா செய்ய வேண்டும் என்பது போராடும் மக்கள் விடுத்திருக்கும் அவசர உடனடி கோரிக்கை என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. அதே வேளை, பன்னெடுங்காலமாக இலங்கையின் தேசிய பொருளாதார வளத்தைச் சுரண்டி தங்கள் குடும்பத்தின் செல்வத்தைப் பல்கிப் பெருக்கிய அனைத்து அரசியல்வாதிகளுக்கும் எதிரான ஒரு குறியீடாகவே “Gota Go Home” என்ற அறை கூவல் எழுகிறது. இன மதப் பிளவுகளைத் தாண்டி நாங்கள் இலங்கையர்களாக ஒன்றுபட்டு இந்த நாட்டை தூய்மை படுத்துவோம்



ஜூட் பிரகாஷ்
(அவுஸ்திரேலியா)

என்று எங்கள் இளையவர்களும், வீதியில் போராடும் மக்களும் விடுக்கும் அழைப்பை, தமிழ் மக்களாகிய நாங்கள் சந்தேகக் கண் கொண்டு பார்ப்பதில் எந்த விதத் தவறும் இல்லை. எண்பதுகளின் இறுதியில், இந்திய ராணுவத்திற்கு எதிராகப் போராடிய விடுதலைப் புலிகளை சிங்கள மக்கள் அன்று தேசிய வீரர்களாவே பார்த்தார்கள். 1990 இன் ஆரம்ப மாதங்களில் இந்திய ராணுவம் இலங்கையை விட்டு வெளியேறி விட, JVP கிளர்ச்சியும் ஒடுக்கப்பட்டு விட, தமிழர்களும் சிங்களவர்களும் கைகோர்த்து, “லொவே சமா.. எக மதயே” என்று பாட்டுப் பாடி, பிரேமதாசாவின் ஆட்சியில் புதிய யுகத்தைப் படைப்பதாக உறுதிமொழியும் எடுத்துக் கொண்டார்கள். 1981 யாழ்ப்பாண நூலக எரிப்பையும், 1983 கறுப்பு ஜூலையின் அவலங்களையும், அவர்களும் நாங்களும் மறந்து நின்ற நாட்கள் கனகாலம் நிலைக்கவில்லை. இரண்டாவது ஈழ யுத்தம் தொடங்கியதும், பழைய குருடி கதவைத் திறடி கதையாக சிங்கள பேரினவாதம் மீண்டும் தன்னை மகாவம்ச சிந்தனைக்குள் பூட்டி வைத்து தாழ்ப்பாள் போட்டுக் கொண்டது. டென்சில் கொப்பேகடுவ, லலித் அத்துலத் முதலி, ரணசிங்க பிரேமதாச, காமினி திஸநாயக்க என்று வரிசையாக சிங்களத் தலைவர்கள் படுகொலை செய்யப்பட்டும், பூநகரி உட்பட பல ராணுவ தளங்கள் அழிக்கப்பட்டும், சிங்கள ராணுவம் தோல்வியின் விளிம்பில் நின்ற நிலையில் தான், சந்திரிகா 1994 ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முன்வந்தார். தமிழர்களின் உரிமையை மதிக்கிறேன், அவர்களின் பிரச்சினையை தானறிவேன், அவர்களுடன் ஆட்சி அதிகாரத்தை பகிர்வேன் என்று சிங்கள மக்களிற்குப் பகிரங்கமாக அறிவித்து வாக்கு கேட்ட சந்திரிக்கா எடுத்த சமாதான தேவதை அவதாரம், அவருக்கு 62 சதவீத வாக்கு வேட்டைக்கு உதவி அவரை ஜனாதிபதியாக்கியது.

மங்களவின் “சுது நெலும்” இயக்கம் மீண்டும் இன ஒற்றுமைக்கான முன்னெடுப்புக் கோஷங்களில் முனைப்புக் காட்ட, நீலன்– பீரிஸ் அதிகாரப் பகிர்வுத் திட்டம் நம்பிக்கையைத் தந்து கொண்டிருந்த வேளையில் தான் மூன்றாவது ஈழ யுத்தம் தொடங்கியது. கடுமையான பொருளாதாரத் தடை, நவாலிப் படுகொலை, யாழ்ப்பாண இடப்பெயர்வு, வன்னியில் தீவிர இராணுவ நடவடிக்கை என்று தமிழ் மக்கள் சொல்லொண்ணாத் துன்பங்களைச் சந்தித்துக் கொண்டிருக்க, சிங்கள பேரினவாதம்

21 ஆம் பக்கம் பார்க்க...

Nandy's Catering & Partyservice
உங்கள் இல்லத்தில் எந்த வைபவங்களாக இருந்தாலும்
குன்றாத சுவையுடன், சுடச் சுடப் பரிமாறுகின்றோம். இலங்கை இந்திய ஐரோப்பிய
உணவுகளையும் தயாரித்த வழங்குகின்றோம்.
பரிமாறுதல் ஒரு கலை அது எமது நிறுவனத்தின் கைவந்தகலை!
ஒரே குடையின் கீழ் எங்கள் சேவை!
உணவு விநியோகம் பாரிமாறல் மற்றும் நிழல்படம், வீடியோ அதுமட்டுமன்றி எமது திறமையான ஊழியர்கள் உங்கள் விழாவை திட்டமிடுதல், திருமணமேடை, மண்டபம் மற்றும் மண்டபச் சோடனைகள் மற்றும் நடைமுறைப்படுத்துதல் போன்றவைகளுக்கு உதவ ஆயத்தமாக உள்ளோம்
Mobil 0173-7424955
Tel:0211 76 91 974
NANDY'S
CURRY'S & MORE
WWW.NANDYS.DE
Düsseldorf
www.Nandys.de
e.mail:info@nandys.de





**சேவியர்**
(தமிழ்நாடு)

நடுப்பக்கம்

# பூட்டிய கதவைத் திறந்து வெளியே வாருங்கள்!

நடுவுல கொஞ்சம் பக்கத்தைக் காணோம் – என்பது போல நமது வாழ்க்கையின் சில வருடங்களை கொரோனா வந்து கடித்துத் தின்று ஏப்பம் விட்டு விட்டுச் சென்று விட்டது. அது விழுங்கி முடித்த வருடங்களோடு பல உயிர்களும் கலந்து விட்டது தான் மாபெரும் துயரம். சட்டென திரும்பிப் பார்க்கும்போது நமது ஆயுளில் விழுந்து விட்ட ஒரு கீறல் அழுத்தமாகவே தெரிகிறது.

கொரோனா ஆரம்பிக்கும் முன் யாருமே அதன் வீரியத்தை முழுதாய்ப் புரிந்து கொள்ளவில்லை. உலகின் ஏதோ ஒரு மூலையில் தோன்றி அங்கேயே அடங்கிவிடும் என்று தான் முதலில் நினைத்தார்கள். நம்ம நாட்டுக்கு வராது,



நம்ம மாநிலத்துக்கு வராது, நம்ம ஏரியாவுக்கு வராது, நம்ம தெருவுக்கு வராது, நம்ம வீட்டுக்கு வராது, நமக்கு வராது... என படிப்படியாய் நம்பி, நொந்து போனவர்கள் தான் அநேகம். கொரோனா உலகெங்கும் பரவி எல்லோரையும் கிலிக்குள் மூழ்கடித்தது புவி அறிந்த வரலாறு.

கொள்ளை நோய்களெல்லாம் அறிவியல் வளராத காலத்தின் புனைக் கதைகள் என நினைத்தவர்களும், இன்று மருத்துவம் கொடிகட்டிப் பறக்கிறது எல்லாமே சட்டென அடங்கிவிடும் என நம்பியவர்களும், எந்த நோயும் நம்மை ஒன்றும் செய்யாது என மீசை முறுக்கியவர்களும் ஒட்டு மொத்தமாய் கதவுகளுக்குள் அடைபட்டுப் போன நிகழ்வை நாம் நேரடியாகக் கண்டோம்.

இந்த கதவடைப்பின் காலம நமக்குக் கற்றுத் தந்த வாழ்க்கைப் பாடங்கள் எக்கச்சக்கம். எல்லாவற்றையும் விட உயிர் தான் முக்கியம் என்றும், உயிருக்கு உயிரானவர்களாய் இருந்தால் கூட தொற்று நோய் வந்துவிட்டால் அவர்களை எதிரியாகவே பாவிப்பது சர்வ சாதாரணம் என்றும், தனக்கு அடுத்து தான் பிறர் நலன் என்றும், பணம் எல்லாம் ஒன்றுமே இல்லை என்றும் பல விஷயங்களை சாமான்யர்களுக்குக் கற்றுத் தந்தது கொரோனா.

அதே நேரத்தில் சிலர் இதை மனிதம் விற்று பணத்தை நிரப்பும் வாய்ப்பாகப் பார்த்தார்கள். உதவித் தொகைகளை விழுங்கி ஏப்பம் விட்டார்கள். மருந்துகளைப் பதுக்கிக் கொள்ளை லாபம் சம்பாதித்தார்கள். மருத்துவச் சேவைக்காய் சொத்தையே எழுதி வாங்கினார்கள். கள்ளச் சந்தைகளில் மனிதநேயத்தைக் கொன்று சுயநலம் பொறுக்கினார்கள்.

காலம் கனிவானது. தனது கொடூர வேட்டையை நிறுத்தி விட்டு இப்போது கொஞ்சம் கொஞ்சமாய் மக்களுக்கு விடுதலைக் காற்றை சுவாசிக்க வாய்ப்பு வழங்கியிருக்கிறது. மாஸ்க்களுக்குள் புதையுண்டு போயிருந்த புன்னகையை மீண்டும் முகத்தின் முன்னால் கொண்டு நிறுத்தியிருக்கிறது.

தற்காலிகத் தடங்கல்கள், நிரந்தர மாற்றங்களை நோக்கி நம்மை நடத்த வேண்டும். அடைபட்ட கற்கள் உடைபடும் போது புதிய விடியலின் கதவு திறந்தாக வேண்டும்.

***அடைக்கப்பட்ட கதவுகள் தோல்வியின் முகவரிகள்.**
*** திறக்கப் படும் கதவுகளே வெற்றியின் வரவேற்பாளர்கள்.**
***அடைக்கப்பட்ட கதவுகள், அடிமை நிலையின் குறியீடுகள்.**
***உடைக்கப்பட்ட கதவுகளே சுதந்திர மனதின் வெளிப்பாடுகள்.**
***அடைக்கப்பட்ட கதவுகள் சுயநலத்தின் சின்னங்கள்.**
***திறக்கப்படும் கதவுகளே மனிதத்தின் சாரல்கள்**
**அடைகப்பட்ட கதவுகள் அச்சத்தின் மிச்சங்கள்.**
*** திறக்கப்படும் கதவுகளே உறுதியின் உரையாடல்கள்.**



17 ஆம் பக்கம் பார்க்க...



அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்



# பூட்டிய கதவைத் திறந்து வெளியே வாருங்கள்!

போதும். கதவுகளுக்குள் காலங்களைப் பூட்டி வைத்தது போதும், இனி பூட்டிய கதவுகளைத் திறந்து வெளியே வருவோம். இதுவரை டிஜிடல் கதவுகளுக்குள் பூட்டப்பட்டுக் கிடந்த நாம் மெல்ல மெல்ல டிஜிடலைக கதவுகளுக்குள் பூட்டி வைத்து விட்டு நிஜத்தின் வீதிகளில் நடந்து வர வேண்டும். எதை விடவும் உயர்வானது உயிர் என்பதும், அன்பு என்பதும், மனித நேயம் என்பதும் நமக்கு நிச்சயம் புரிந்திருக்கும். இனிமேல் டிஜிடல் சாவிகள் நம்மைக் கைதியாய் அடைத்து விடாதபடி கவனமாய் இருப்போம். கதவு திறந்து வெளியே வருவோம்.

இதுவரை சந்திக்க மறுத்தோ, சந்திக்க வெறுத்தோ, சந்திக்கத் தயங்கியோ ஒதுக்கப்பட்டிருந்தவர்களை நேரில் சந்திப்போம். சானிடைசர்கள் இல்லாத கரங்களினால் கைகுலுக்குவோம். தூரமாய் நின்று விட்டு ஓரமாய்ப் போவதற்கு முடிவு கட்டுவோம். தனிமை எனும் கதவுகளைத் திறந்து வெளியே வருவோம், உறவு எனும் பெருவெளியில் விளையாடித் திரிவோம்.

அச்சம் எனும் கதவினைப் புரட்டி, நம்பிக்கை எனும் பாதைகளில் நடக்கத் துவங்குவோம். எந்த ஒரு மாபெரும் இருளின் முடிவிலும் ஒரு மெல்லிய ஒளியேனும் உண்டு என்பதை இந்த காலகட்டம் நமக்கு விளக்கியிருக்கிறது. இருளின் நினைவுகளுக்குள் நின்று விடுவதால் வாழ்க்கை வளம் பெறுவதில்லை. ஒளியின் இழைகளைப் பிடித்துக் கொண்டு நடக்கத் துவங்குவதில் தான் அது அர்த்தம் பெறுகிறது. ஒரு இருளின் முடிவுரையில், வெளிச்சத்தின் முகவுரையை நாம் தொடங்குவோம்.

மருத்துவ மிரட்டல்கள் பூட்டிய மாபெரும் கதவினை உடைத்து, யதார்த்தத்தின் வீதிக்கு வருவோம். உடலை வலுவாகவும், மனதை திடமாகவும் வைத்திருக்க என்ன செய்ய வேண்டும் என்பதை சிந்திப்போம். கெட்ட பழக்கங்களை விட்டொழிப்பதும், நல்ல பழக்கங்களை தொட்டெடுப்பதும் இன்றைய தேவை என்பதை உணர்வோம். வலுவான உடலும் மனமும் நம்மை வளமான வாழ்வுக்குள் அழைத்துச் செல்ல முடியும் என்பதை நினைவில் கொள்வோம்.



வாழ்க்கையின் முதன்மையான விஷயங்கள் என்ன ? வாழ்க்கையில் முக்கியமற்ற விஷயங்கள் என்ன என்பதில் இதுவரை நமக்கு குழப்பங்கள் இருந்திருக்கலாம். ஆனால் இப்போது தெளிவடைந்திருப்போம். கோவிட் பாசிடிவ் வந்தபின் மீண்டு வந்தவர்களெல்லாம், வாழ்க்கையை புதிய பாசிடிவ் திசையில் பார்க்கப் பழகியிருப்பார்கள். தேவையற்ற முதன்மைகளை உடைத்து, மனிதமும் அன்பும் உலவும் புதிய முதன்மைகளை உருவாக்குவோம்.

கடந்த காலத்தின் நிகழ்வுகள் நமக்கு பாடங்களைக் கற்றுத் தரவேண்டும். அவை நமக்கு சவால்களைச் சந்திக்கும் வீரத்தைக் கற்றுத் தரவேண்டும். எதையும் எதிர்கொள்ளும் துணிச்சலைக் கற்றுத் தரவேண்டும்.

வெளிவருவோம். இனிமேல் இடைவெளியற்ற மனிதத்தை, தடைகளே இன்றி பரிமாறி மகிழ்வோம். தயக்கமற்ற அன்பின் தொடுதல்களால் அன்பினைப் பகிர்வோம். கிருமிகளை விட வலிமையானது உறவுகள் என்பதை உணர்வோம். ■

---

# கணவன் கரைசேர்ந்தார்!

## இங்கிலாந்து பெருந்தெருவில் ஒரு சம்பவம்!

### England M6 (highway)

சிவப்பிரியன்






England M6 highway இங்கிலாந்தில் (28.03.2022) நேற்றைய முன்தினம் 6ம் இலக்க உபைா றயல இல் திடீர் என traffic jam ஏற்பட்டது. நீண்ட நேரத்தின் பின் யாவரும் கடந்து சென்றபோது. அங்கு விபத்து ஏதும் ஏற்பட்டதற்காகான தடங்கள் ஏதும் இல்லை.

அதே நேரம் பெரும் தெரு திருத்த வேலைகளும் ஏதும் இல்லை. சினம் கொண்ட பயணிகள் காரணத்தை அறிய முற்பட்டபோது ஒரு செய்தி கிடைத்தது.

அது உண்மையான உறுதியான செய்தி. ஆம் கணவன் மனைவி இருவருக்கும் காருக்குள் வாக்குவாதம் ஏற்பட, மனைவி கணவனை ஹைவேயில் இறக்கிவிட்டு சென்றுவிட்டார். கணவனும் ஹைவேயில் அங்கும் இங்குமாக நடந்திருக்கிறார். அவ்விடத்திற்கு விரைந்து சென்ற பொலிசார் தெருவை மறித்து அந்த மனிதரை பக்குவமாமாக கரைசேர்த்தனர். கணவன் மனைவி சண்டை ஹைவேயை சில நேரம் மூடவேண்டி ஏற்பட்டது. நீங்கள் யோசிப்பது தெரிகிறது,அட நாம் போடாத சண்டையா இப்படித்தானே எண்ணுகிறீங்கள். நம் பெண்டாட்டி அப்படிப்பட்டவள் அல்ல! ■






அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்



# வியர்வையின் நறுமணம்

நாட்டு நிலைமையின் சூழ்நிலை காரணமாக ஜேர்மனிக்கு புலம் பெயர்வது என்று முடிவெடுத்த நாங்கள், போவதற்கான நாள் நெருங்க நெருங்க எதையெல்லாம் கொண்டு போவது என்று எண்ணத் தொடங்கினோம். சொந்தக்காரர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு யோசனைகளைச் சொன்னார்கள்.

"பிள்ளைகளோடு போகிறியள், பிள்ளைகளின் உடுப்பைக் கூடுதலாகக் கொண்டு போங்கள் உங்கள் இரண்டு பேருக்கும் இரண்டிரண்டு உடுப்புக்கள் கொண்டு போனால் போதும், நாங்கள் சொல்லியும் கேக்கிறியள் இல்லை, போய்ச் சேர்ந்ததற்குப்பிறகு மறுமொழி வரும் வரையும் நாங்கள பைத்தியம் பிடிச்ச மாதிரித்தான் இருப்பம்" என்று மனைவியின் தாய் சொன்னார். உடுப்புகளை சூட்கேசுக்குள் மனைவி அடுக்கும் போது "இஞ்சரப்பா இதையும் சேர்த்து வையுங்கள்" என்று ஒரு பருத்திநூல் பச்சைக்கரை போட்ட சால்வையைக் குடுக்க, சால்வையை வாங்கியவள் என்னை நிமிர்ந்து பார்த்து, "இது எதுக்கு, ஜேர்மனி குளிரென்று சொல்லுகினம், இதைக் கொண்டு போய் அங்கை என்ன செய்யிறது, அதோடை இது கிழிஞ்சு தைச்சிருக்கு"- என்று சொல்ல,"பரவாயில்லை சூட்கேசுக்குள்ளை வையப்பா தேவைப்படும் என்று நான் சொல்ல" என்னமோ சொல்றியள் என்றவாறு சால்வையை வைச்சு சூட்கேசை மூடினாள். விமான நிலையத்திற்கு போகும் போது பிளளைகளுக்கு குளிரைத்தாங்கக்கூடிய உடைகளை போட்டு விட்டிருந்தோம். நானும் மனைவியும் குளிரைத் தாங்கக்கூடிய உடைகளை போடவில்லை.சாதாரண உடையிலிருந்தோம்.

நாங்கள் ஜேர்மனிக்கு புலம் பெயர்ந்த மாதம் ஒரு குளிர்மாதம்.ஆஸ்திரிய தலைநகரில் வந்திறங்கி வெளியே பார்த்த போது வெண்பனி தூவிக் கொண்டிருந்தது.விமான நிலையத்துக்குள் குளிரின் தாக்கமிருந்ததால், சூட்கேசைத் திறந்து ஏதாவது ஒன்றால் போர்த்துவோம் என்று தேடிய போது சூட்கேசுக்குள்ளிருந்த துவாயை எடுத்து மனைவிக்கு கொடுக்க அவர் போர்த்திக் கொண்டார். நான் சால்வையை எடுத்து கிழிந்து தைத்த பகுதி தெரியாமல் மடித்துப் போர்த்திக் கொண்டன். அது அப்புவின் சால்வை. அப்புவிடம் நாலைந்து சால்வைகள் இருந்தன. ஆனால் அதிகமாக விரும்பிப் பாவிப்பது இந்தச் சால்வையைத்தான். சால்வையைப் போர்த்தியதும் அது குளிரிலிருந்து என்னைக் காத்தது போலத் தோன்றியது. வியன்னாவிலிருந்து ஏரோபிளட் விமானத்தில் கிழக்கு ஜேர்மனி விமானத்திலும் அந்தச் சால்வையையே போர்த்தியிருந்தன்,



ஏலையா
க.முருகதாசன்
(யேர்மனி)

பேர்லினில் ஒரு இடத்தில் தங்கிய போதும் அந்தச் சால்வையை போர்த்தி, அதற்கு மேல் போர்வையால் போர்த்திக் கொண்டு படுத்தன்

ஒவ்வொரு நாளும் காலையிலும் இரவிலும் குளிக்கும் பழக்கமுள்ளவர் அப்பு. இரவில் குளிக்கும் போது அந்தச் சால்வைக்கு சவர்க்காரம் போட்டு அடிச்சுத் துவைச்சு அலம்பிக் காயவிட அது அடுத்தநாள் காலை உலர்ந்து சருகாய் காய்ஞ்சிடும்.

ஒருநாள் அப்புவும் நானும் மண்வெட்டியால் கொத்திக் கொண்டிருந்த போது,மண்வெட்டி தவறுதலாக எனது காலில் பட்டு காயம் ஏற்படுத்தி இரத்தம் பாயத் தொடங்க பதறிய அப்பு மண்ணை அள்ளி காயத்தின் மேல் வைச்சு தனது இடுப்பில் கட்டியிருந்த சால்வையை அவிழ்த்து காயத்தைச் சுற்றிக் கட்டிவிட்டதுடன், தோட்டத்துக்கு கொண்டு வந்த சைக்கிளில் என்னை இருத்திக் கொண்டு, காங்கேசன்துறை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போய் காயத்துக்கு இழை போட்டு மருந்து கட்டுவித்தார். இரத்தமும் மண்ணும் கலந்திருந்த சால்வைக்கு சுண்ணாம்பு எலுமிச்சம் புளியெல்லாம் போட்டு அப்பு தோய்க்க சால்வை பழைய நிலைக்கு வெள்ளை வெளேரென்று வந்தது.

அப்பு மூளாய் ஆஸ்பத்திரியில் சுகமில்லாமல் ஒரு கிழமை இருந்த போது அம்மா அவரோடு ஆஸ்பத்திரியிலேயே நின்றார். எனக்கோ இரவுகளில் நித்திரையில்லை, அப்புவைப் பார்க்க ஆஸ்பத்திரிக்குப் போன போது எனக்குள நித்திரை வரவில்லை என்று சொல்ல, அம்மா கட்டிலின் ஒரு ஓரத்திலிருந்த அந்தச் சால்வையை எடுத்து தந்தார்.அன்றும் தொடர்ந்தும் அப்புவின் சால்வையை தலைகணியில் வைச்சுப் படுத்த போது நல்ல நித்திரை வந்தது.

ஜேர்மனிக்கு வந்ததற்குப் பிறகு பல ஆண்டுகள் கழித்து இலண்டனிலிருக்கின்ற எனது மனைவியின் ஒன்றுவிட்ட தங்கை மகனின் திருமணத்திற்கு போன போது மனைவியின் தங்கை,"அத்தான் நீங்கள் பட்டுவேட்டி கட்டி பட்டுச் சால்வை கழுத்தில் போட வேண்டும் " என்றார். நான் பட்டுவேட்டி சால்வை அதற்கு தகுந்தாற்போல சட்டையுடன் அப்புவின் சால்வையையும் திருமணத்திற்கு போகும் போது கொண்டு போயிருந்தன்.

இலண்டனுக்குப் போனதும் முதல் வேலையாக அப்புவின் சால்வையை எடுத்து கிழிந்து தைச்சதை மறைத்து மாப்பிளைச் சால்வை மடிப்பை மடிச்சு அயன்பண்ணி வைச்சிருந்தன். திருமண மண்டபத்திற்கு வெளிக்கிடும் போது அப்புவின் சால்வையை எடுத்து கழுத்தைச் சுற்றித் தொங்கவிட்டதைக் கண்ட மனைவி" என்னது பட்டு வேட்டிக்கு பருத்திச் சால்வையைப் போட்டுக் கொண்டு வாறியள், யாராவது பார்த்தால் என்ன நினைப்பினம்" என்று சொல்லிக் கொண்டிருக்கும் போது எனது மைத்துனி" இல்லையக்கா இதுவும் ஒரு விதத்தில் அத்தானுக்கு நல்லாய்த்தானிருக்கு, விடுங்கள் அவர் அதையே போட்டுக் கொண்டு வரட்டும் என்றாள்.

எனது அப்புவின் கண்ணும் கருத்துமான பாசம் மட்டுமல்ல,வியர்வை சிந்தி உழைச்ச உழைப்பாளியின் வியர்வை மணம் அப்புவோடு ஒட்டி உறவாடிய இந்தச் சால்வை மூலமாகவும் இன்றும் எனக்கு நறுமணமாக இதயத்தை நிரப்புகின்றது. ■

ஆசியா சமுத்திரம்
Asiatischer super markt
R.Ragunathan
Email: mediajara@gmail.com
Handy: 01520 900 90 30
Parkhofstraße-101
41836 Hückelhoven
Tel: 02433 903282
Fax: 02433 903281

ஆசிய, ஆபிரிக்க மற்றும் இலங்கை, இந்திய பலசரக்குப் பொருட்கள், மரக்கறி வகைகள், கடல் உணவுவகைகள் அனைத்திற்கும் எம்மை நாடுங்கள்.
TEMPO Ria MoneyGram
துரித பணமாற்றுச் சேவை
Hückelhoven

மங்கல இசைக்குழு
உங்கள் அனைத்து மங்கள வைபவங்களையும் நாதஸ்வர தவில் கானமழையில் நனைத்திட
தவில் மேதை அளவையூர் குமரகுரு அவர்களின் புதல்வன்
நாதஸ்வர இன்னிசைச் செல்வன்
N.K.Raguraman


Dresdener Str.6 50126
Bergheim
Germany
Tel: 0049 157 89 15 95 71
0049 2271 670236 | 0049 160 91146240

என் கேள்விக்கென்ன பதில்!!!

# உலகில் முதலாவது அதிசயம் உடலுக்குள் நீண்ட நெடுஞ்சாலை!



Dr.நிரோஷன் தில்லைநாதன் (யேர்மனி)



## நமது உடலுக்குள் மாபெரும் நெடுஞ்சாலை இருக்கிறது தெரியுமா?

ஒரு நகரத்திலிருந்து ஒரு நாட்டில் இருக்கும் எல்லா நகரங்களையும், அத்தோடு அடுத்தடுத்த நாடுகளையும் அடைவதற்கு அமைக்கப்பட்ட சாலைகளை நாம் 'Highway' அல்லது தமிழில் நெடுஞ்சாலை என்று அழைக்கின்றோம். இந்த நெடுஞ்சாலைகள் மனிதன் படைத்த மிகப் பெரிய சாதனைகளில் ஒன்று என்று கூட சொல்வார்கள், சரி தானே? ஆனால், உங்களால் கற்பனையே பண்ண முடியாத பிரம்மாண்டமான, மாபெரும் நெடுஞ்சாலை ஒன்று இருக்கிறது. அது வேறு எங்கும் இல்லை, உங்கள் உடலுக்குள்ளே இருக்கிறது என்று சொன்னால் நம்புவீர்களா?


அடடா, இது என்ன மாபெரும் நெடுஞ்சாலை நமது உடலுக்குள் இருக்கிறது என்று யோசிக்கின்றீர்களா? உங்கள் ஒவ்வொருவரிலும் அடங்கி இருக்கும் அந்தச் பிரம்மாண்டமான நெடுஞ்சாலை வேறொன்றும் இல்லை, உங்கள் உடல் பூராகவும் படர்ந்து பரவியிருக்கும் இரத்த நாளங்களின் வலையமைப்புத் தான் அந்த நெடுஞ்சாலை ஆகும். இந்த வலையமைப்பின் ஊடாக நமது இதயம் தொடர்ச்சியான சீரான முறையில் சுருங்கி விரிந்து நமது உடலில் உள்ள ஒவ்வொரு உறுப்பிற்கும், ஏன் ஒவ்வொரு உயிரணுவிற்கும் (Cell) இரத்தத்தை அனுப்புகின்றது. அட இதில் என்ன அதிசயம் இருக்கிறது என்று கேட்கின்றீர்களா?

ஒரு மனிதனின் உடம்பில் இருக்கும் அனைத்து இரத்த நாளங்களையும் எடுத்து ஒன்றுடன் ஒன்று இணைத்தால், அந்த நாளத்தின் நீளம் சுமார் 100,000km கும் அதிகமாக இருக்கும். சரி, இந்த நீளத்தை உங்களால் கற்பனை பண்ண முடியவில்லை என்றால், இதற்கு வேறு விளக்கம் தருகிறேன். பூமியின் சுற்றளவு சுமார் 40,074 km ஆகும். அப்படியென்றால் இந்த இரத்த நாளங்களுடன் நமது பூமியை 2.5 முறை சுற்றலாம் என்பது தான் இதில் உள்ள ஆச்சரியம் ஆகும். நம்பவே முடியவில்லை அல்லவா?

பொதுவாக ஒரு சராசரி மனிதனின் உடலில் சுமார் 4-6 லிட்டர் இரத்தம் இருக்கும். இதில் உள்ள அதிசயம் என்ன தெரியுமா? நமது இதயம் இரத்தத்தை மிகவும் வேகமாக, குறிப்பாக 1.1 m/s அல்லது 4 km/h வேகத்தில் நமது உடலூடாக அனுப்புகிறது. இப்படி அனுப்பப்படும் இரத்தம் ஒரு முறை நமது உடலூடாகச் சுற்றி வர வெறும் ஒரு நிமிடம் தான் எடுக்கும். இதுவே உடலுக்கு வேலை கொடுக்கும் போது, இன்னும் வேகமாகச் சுற்றி வரும்.

எனவே இப்படி ஒரு மாபெரும் அதிசயத்தை உங்கள் உடலுக்குள்ளே வைத்துக்கொண்டு வெளியே அதிசயங்களைத் தேடவேண்டாம்!

# விரல் சொடுக்கும் போது ஏன் சத்தம் கேட்கிறது?





விரல் சொடுக்குவது, நெட்டி முறிப்பது அல்லது 'cracking your knuckles' என்று சொல்வார்களே, அதை நிச்சயமாக உங்களில் சிலரும் கூட வழக்கமாகக் கொண்டிருப்பீர்கள். சரி தானே? பொதுவாக விரல் சொடுக்கும் போது ஏதோ எலும்புகள் எல்லாமே முறிவது போல் ஒலி கேட்கும். ஆனால் இந்த விரல் சொடுக்கலுக்குப் பின்னால் இருக்கும் மர்மம் என்ன? நாம்

விரல்களைச் சொடுக்கும் போது ஏன் சத்தம் வருகிறது என்று எப்பொழுதாவது சிந்தித்துப்பார்த்திருக்கின்றீர்களா? இல்லையா? அப்படி என்றால் தொடர்ந்து படியுங்கள.

### விரல் சொடுக்குவது என்றால் என்ன?

சிலர் ஒவ்வொரு விரலின் முனையையும் நீட்டி இழுத்துச் சொடுக்குவார்கள், வேறு சிலர் தங்கள் முட்டியை இறுக்கமாக மூடி அல்லது ஐந்து விரல்களையும் பின்னோக்கி வளைத்து எல்லாம் விதம் விதமான வித்தைகள் காண்பித்து நெட்டி முறிப்பார்கள். இப்படிச் செய்தால் தான் அவர்களுக்கு நிம்மதி அல்லது சுகம் கிடைக்கின்றது என்று கூறுகின்றார்கள். 25 முதல் 54 சதவீத மக்கள், அதிலும் குறிப்பாக பெண்களை விட ஆண்களே அதிகமாக நெட்டி முறிக்கின்றார்கள்.

இது எல்லாம் ஒரு பக்கம் இருக்கட்டும், ஆனால் அப்படி விரல்

26 ஆம் பக்கம் பார்க்க...






om shakthi Astrological center

spritual Healer & psychic reader

HAND READING - LOVE READING
HOROSCOPE READING & FUTURE READING

solution: Love problem - marriage problem- Remove Badluck, Stress- Black magic & curse

sri om shakthi astrology center guruji: sriram, a very powerful astrologer, has been practicing astrology since ancient times by visiting the ashtadasha shakthi peethas in kashi and receiving om shakthi, mantra shakthi and vakshuthi through agora meditation tapas. any problem will be solved in 11 days


sri om shakthi Astrology centre காசியில் உள்ள அஷ்டாதஷ சக்தி பீடங்களுக்குச் சென்று அகோர தியான தவங்களால் ஓம் சக்தி, மந்திர சக்தி, வக்சுத்தி ஆகியவற்றைப் பெற்ற நாக துறவிகள் மற்றும் பழங்குடியனர் குருஜி: ஸ்ரீ ராம் , மிகவும் சக்தி வாய்ந்த ஜோதிடர் அன்றைய காலத்திலிருந்தே முகம், கை, ரேகை வேத்திலை போட்டு பார்த்து ஜோதிடம் பார்த்து வருகின்றனர்



PANDIT SRI RAM | Mob: 07424886222 |07417344229

Best Food Super market |30 loam pit hill, lewisham London SE13 7sw





மணமகன் தேவை

வெற்றிமணி திருமண சேவை

யேர்மனியில் MSC படித்து நெய்ஸ் நகரில் நிரந்தர வேலைசெய்யும் நற்குணம் உடைய சைவ வேளாளர் 30 வயது நிரம்பிய பெண்ணுக்கு, ஏற்ற மணமகன் தேவை.பட்டதாரிமணமகன், 75 km தூரத்துக்குள் வரவேற்கிறோம்.

பெற்றோர் தொடர்புகொள்ளவும். தொடர்புகளுக்கு. +49 1577 4318528

யேர்மனியில் கற்றிங்கன் நகரில் Gymnasium தில் ஆசிரியையாக பணிபுரியும் நற்குணம் உடைய சைவ வேளாளர் 28 வயது நிரம்பிய பெண்ணிற்கு ஏற்ற மணமகன் தேவை. பட்டதாரி மணமகன், 75 km தூரத்துக்குள் வரவேற்கின்றோம்.

தொடர்புகளுக்கு:- +49 1577 4318528

நீண்டகாலம் மக்கள் மனதில் நம்பிக்கை ஒளி பரப்பும் தங்க நகையகம்

# Jaffna Bazar Jewellery




தங்க நகைகள் என்றால் தங்கள் மனதில் நிலைத்து இருப்பவர்கள் நாங்கள் என்றும் நாடுகள்

2021 ஆண்டுக்கான புத்தம் புது டிசைன்கள், கலைநயம் மிளிரும் தரமான தங்க நகைகள் எம் கையிருப்பில்.

பொன்னுருக்கு, காதுகுத்து வைபவங்களுக்கு எம்மை அழையுங்கள்

திருத்த வேலைகள் குறுகிய காலத்துள் செய்து தரப்படும்.



ஆலயங்களுக்கு தேவையான பூஜை பொருட்கள் எம்மிடம் நிறைவாக உண்டு

உங்கள் இலத்திற்கு தேவையான மளிகைப் பொருட்கள் என்றும் போல் மலிவு விலையில் கிடைக்கும்

பசுமையான மரக்கறி வகைகள்
கடல் உணவு வகைகள்
அனைத்தும் எம்மிடம் தரமாக
மலிவாகக்கிடைக்கும்

Jaffna Bazar

Jaffna Bazar, Kaiser Straße.49 ,
69329 Frankfurt Main

Tel: 069 25 62 6353 \ 0049 69 25626353
0049 179 4792961 \ 0049 151 71520425

15 ஆம் பக்கத் தொடர்ச்சி...

# எந்த நம்பிக்கையில் நாங்கள் கை கோர்ப்பது?




மறுபடியும் முருங்கை மரத்தில் ஏறி, யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றியதை வெடி கொளுத்திக் கொண்டாடியது.

ஓயாத அலைகள் கொடுத்த அடியும், கட்டுநாயக்க விமான நிலையத்தின் மீதான மயிர்கூச்செறியும் தாக்குதலும், சிங்கள இராணுவத்தையும் அரசையும் மீண்டுமொருமுறை தமிழர்கள் முன்னால் மண்டியிட வைக்க, 2001 இல் ரணிலை சிங்களம் தேர்தலில் வெல்ல வைத்து புலிகளுடன் சமாதானம் பேச அனுப்பியது.

புலிகள் அரசோடு நாடு நாடாகப் போய் சமாதானம் பேசிக் கொண்டிருக்க, யாழ்ப்பாணத்துக்கும் மட்டக்களப்புக்கும் படையெடுத்த அரச சார்பற்ற நிறுவனங்கள், இன ஒற்றுமை பற்றி பட்டறைகள் நடத்திக் கொண்டிருக்க, புலிகளின் அடியில் துவண்டு போயிருந்த இலங்கை இராணுவத்தை சத்தமில்லாமல் மீளவும் பலப்படுத்திக் கொண்டிருந்தது சந்திரிக்கா-ரணில் இலங்கை அரசு. வாக்களிக்கப்பட்ட இடைக்கால நிர்வாகமும் (SIHRN) கிடைக்கவில்லை, சுனாமி புனர்நிர்மாணத்திற்கான PTOMS கட்டமைப்பையும் நீதிமன்றத்தின் துணையுடன் JVP தடுத்துவிட, பிளவுண்டு பலவீனமான நிலையில் இறுதி யுத்தத்திற்கு போன புலிகளை எந்த விதமாயினும் அழித்துவிட வேண்டும் என்று மீண்டும் பலமான சிங்கள பேரினவாத சாத்தான் ஓலமிடத் தொடங்கியது.

## எந்த நம்பிக்கையில் நாங்கள் கை கோர்ப்பது?

பேந்தென்ன, முள்ளிவாய்க்காலில் தமிழ்ச் சனத்தை மகிந்தவின் இலங்கை ராணுவம் கொத்துக்கொத்தாகக் இனப்படுகொலைச் செய்து கொண்டிருக்க, சரணடைந்த போராளிகளை கோத்தாவின் இலங்கை ராணுவம் கண்டபடி சுட்டுக் கொன்று கொண்டிருக்க, பொன்சேகாவோ ஆயிரக்கணக்கில் போராளிகளை காணாமலாக்கிக் கொண்டிருக்க, மூன்று லட்சத்துக்கும் மேற்பட்ட மக்கள் வவுனியா தடுப்பு முகாம்களில் அடைக்கப்பட்டு இருக்க, சிங்களம் இலங்கை இராணுவத்தின் வெற்றியை பால் சோறு கொடுத்து கொண்டாடிய காட்சிகள் இன்றுவரை எங்கள் மனத்திரையில் இருந்து அகலவே இல்லை. அதற்குப் பிறகும், சர்வதேச நிறுவனங்களும் தமிழர் தரப்பும் இலங்கை



சர்வதேச போர்க்குற்றங்கள் இழைத்ததை ஆதாரங்களுடன் கத்திக் குழறக் காட்டிக் கொண்டிருக்க, சிங்களமோ போர்க்குற்றம் இழைத்த இராணுவத்தினரையும் தலைமையையும் தேசிய வீரர்களாகவும் மன்னர்களாகவும் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடிய காலமும் அண்மைக்காலம் வரை தொடர்ந்து கொண்டுதான் இருந்தது. இப்படியிருக்க,பொருளாதாரச் சரிவில் தங்களது வாழ்வும் வாழ்வாதாரமும் அழிக்கப்பட்டதால், தங்களின் பிள்ளைகளின் எதிர்காலம் கேள்விக் குறியாக்கப்பட்டதால், வீதியில் இறங்கிய சிங்கள மக்களோடு எந்த நம்பிக்கையில் நாங்கள் கை கோர்ப்பது என்று தமிழர்கள் மத்தியில் எழும் அவநம்பிக்கையீனத்தில் அபரிதமான நியாயம் இருக்கத்தான் செய்கிறது. ஆனால்,தென்னிலங்கையின் வீதிகளில் இரவில் தன்னெழுச்சியாகக் கூடிய மக்கள் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களில் விடுக்கும் கோஷங்கள் நாட்கள் செல்லச்செல்ல ஒரு புதிய வித்தியாசமான பரிணாமத்தை எடுக்கத் தொடங்கியதை அண்மைய நாட்களில் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

இனவாதத்தைத் தூண்டி, மதக் கலவரத்தை ஏற்படுத்தி,2019 இல் ஈஸ்டர் குண்டுத் தாக்குதலை நடாத்தி, தமிழர் களைக் கொடுமைப்படுத்தி, இந்த ஆட்சியாளர்கள் ஆட்சிக்கட்டிலேறி, நாட்டின் வளத்தைச் சுரண்டி, தங்களது குடும் பத்தைச் செல்வச்செழிப்பாக்கி விட்டார்கள் என்று இன்று தென்னிலங்கை வீதிகளில் சிங்கள மக்கள் சிங்கள மொழியில் கத்தும் சத்தத்தில் YouTube உம் Facebook உம் அலறுகிறது. அதேவேளை, தமிழ் இனப்பற்றோடும், தமிழ் மொழிப்பற்றோடும் வாழ்ந்து கொண்டு, இலங்கையை விட்டு வெளியேற மாட்டோம் என்ற உறுதிப்பாட்டோடு தாயகத்தில் வாழும் தம்பிமார் இந்த ஆர்ப்பாட்டங்களை ஆதரித்து பதிவிடும் தர்க்கரீதியான நியா



யமான பதிவுகளும், ஆர்ப்பாட்டங்களில் அவர்களும் கலந்து கொள்வதும் தமிழர் சிந்தனையில் மெல்ல மெல்ல மாற்றத்தை ஏற்படுத்தத் தொடங்கியிருக்கிறது.

மறுவளமாக, இலங்கை வரலாற்றில் ஏற்பட்டிருக்கும் இந்த அசாதாரண சூழ்நிலையில், சாணக்கியமாகச் செயற்பட்டு, இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, பயங்கரவாத தடைச் சட்டத்தை நீக்கி அரசியல் கைதிகளை விடுதலை செய்தல், அரசியல் யாப்பை மாற்றி அதிகாரப் பரவாலக்கலை வலுப்படுத்தல் போன்றவற்றை அடைய நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் அரசியல் களத்தில் ஈடுபட்டிருக்கிறார் என்று அரசல் புரசலாக வெளிவந்து கொண்டிருக்கும் செய்திகளும் ஏதோ ஒரு நல்ல மாற்றம் வரும், இனியாவது வரவேண்டும், என்ற எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

அகிம்சை வழிப் போராட்டம், ஆயுதப் போராட்டம், ஜனநாயகப் போராட்டம், இராஜதந்திரப் போராட்டம் என்று பல்வேறு வடிவங்களை எடுத்த எங்களது போராட்டம், இன்று தென்னிலங்கையில் எடுத்திருக்கும் இந்த புதிய வகை போராட்டத்தில் இணைந்து பயணித்தும் எங்களது இலக்கை அடைய முயற்சிக்கலாம், முயற்சித்துப் பார்கலாம். தோற்பதற்கும் இழப்பதற்கும் ஒன்றுமில்லை என்ற நிலையில் வாழும் நாங்கள், ஏமாந்தும் ஏமாற்றப்பட்டும் பழகிப் போன நாங்கள், புதிய நம்பிக்கையில் புதிய எதிர்பார்ப்பில் புதிய இந்தப் போராட்டத்தில் இணைந்து பயணிப்பதால் எந்தக் கேடும் நமக்கு நடந்து விடப்போவதில்லை. எங்களது அடிப்படைக் கொள்கைகளில் இருந்து வழுவாமல், காலவோட்டத்திற்கு ஏற்ப எங்களது போராட்ட வழிமுறையை மாற்றுவதன் மூலம், எங்களது தாயகத்தில் எங்களது இருப்பைத் தக்க வைத்துக் கொண்டு, நீடித்த நிலைத்த கௌரவமான நீதியான சமானதானத்தை அடைய இந்த வரலாற்றுச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த நாங்கள் எங்களை மாற்றிக் கொள்ள வேண்டும்.

சிங்களம் மாற வேண்டும், சர்வதேசம் மாற வேண்டும், இந்தியா மாற வேண்டும், தமிழ்நாடு மாறவேண்டும் என்று எதிரியையும் அந்நிய சக்திகளையும் மாற வேண்டுமென்று எதிர்பார்த்துக் காத்திராமல், நாங்கள் எங்களை மாற்றிக்கொண்டால் எங்கள் தேசமும் எங்கள் மக்களும் சீரும் சிறப்புடனும் கௌரவாக வாழும் காலத்தை நாங்கள் உருவாக்கிக் கொள்ளலாம.வரலாறு தந்த, எங்களுக்கு கிடைத்த பல சந்தர்ப்பங்களை நாங்கள் சரியாக பயன்படுத்தாமல் விட்ட தவறை நாங்கள் இன்று அனுபவிக்கிறோம். இனியும், முந்தி அப்படி நடந்தது, அப்ப அவங்கள் அப்படிச் செஞ்சவங்கள், அதை மறக்கேலாது, இதை மறுக்கேலாது என்று பழங்கதை பறைஞ்சு அலட்டிக் கொண்டிராமல், தாயகத்தில் வாழும் இன்றைய இளைய தலைமுறை காட்டும் புதிய பாதையில் பயணித்து பார்ப்போம்.இந்த முறை,தோற்பது யாராக இருந்தாலும்,வெல்வது நாமாக இருக்க வேண்டும்!







அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்



# இலக்கியத்தில் இவர்கள்... 21

கௌசி (யேர்மனி)

உலகம் ஒரு சிறு கிராமமாக ஒடுங்கிவிட்டது. நாம் உலகத்தைக் கைகளுக்குள் கொண்டு வந்து காட்சிப் பொருளாக்கிவிட்டோம். சினிமாக் கொட்டகைகள், வியாபார ஸ்தாபனங்கள், விழாக்கள், ஆலய வழிபாடு இவைபோன்ற எதுவுமே தேவையில்லை. அனைத்தையும் இருந்த இடத்தில் இருந்து கண்டு களிக்கின்றோம்

காலையில் எழுந்து கமராக் கண்களை விரிக்கின்றோம். முகநூல், புலனம் ஆகிய கட்டிடங்கள் அழைக்கின்றன. அவற்றிலே முகநூலைத் திறந்தால், மரணஅறிவித்தல், பிறந்தநாள் விழா, திருமண விழா, புத்தக வெளியீடு, பொருள்களின் விற்பனை, உலகச் செய்திகள், இலக்கிய, கலை நிகழ்வுகள், அரசியல் ஆய்வுகள், உறவினர்களின் சந்திப்பு உரையாடல்கள் என தொடர்ந்து றீல் போல் விழுந்து கொண்டே இருக்கும். வாழ்த்துகள், ஆழ்ந்த அனுதாபங்கள் மாறி மாறி தட்டச்சில் கைகள் சுழலுகின்றன. ஒரு தளம் பல விளம்பரங்களுக்குரிய காட்சியகமாக இருக்கின்றது. கதவைத் திறந்து முன் பகுதியில் இருக்கும் பிறந்தநாள் விழா அறை. அதற்குள் பலரும் பயணம் செய்த காட்சியைக் காணலாம். இவ்வாறு ஒவ்வொரு அறையாகக் காட்சியகத்தைப் பார்த்து முடித்து வெளிவர பல மணித்தியாலங்களைக் கடந்து விடுவோம்.

2003 ஆம் ஆண்டு Mark Zuckerberg ஹாவார்ட் பல்கலைக்கழகத்தில் படிக்கும் போது நண்பர்களுக்காக



## முரசுக்குப் பின்னால் இன்று கோட்டும் முரசாக முகநூல்!

உருவாக்கிய Facemash.com என்னும் இணையத்தளம். பின் 2004 இல் முகநூலாக உருவெடுத்தது. பல நாடுகள் முகநூலைத் தடை செய்துள்ளன. பல இடங்களில் வேலைநேரங்களில் பார்ப்பதற்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இருந்தும் 2022 தை மாதக் கணக்கீட்டின்படி மாதந்திரம் முகநூலைப் பயன்படுத்துபவர்கள் 2.912 பில்லியன்கள் என்று கணக்கீடு காட்டுகின்றது. நாள்தோறும் பயன்படுத்துபவர்கள் 1.929 பில்லியன்கள். ஒரு பில்லியன் என்பது 1.000,000,000 என்பதை நாம் அறிந்திருக்கின்றோம். 2009 ஆம் ஆண்டு அமெரிக்க ஐக்கிய கூட்டரசு நாடுகளின் மக்கள் தொகைக் கணக்கெடுப்பு செயலகம் தற்பொழுது உலக மக்கள் தொகை 6,831,200,000 என மதிப்பிட்டுள்ளது. 1990 ஆண்டுகளின் பிற் பகுதியில் உலகெங்கும் நிகழும் பிறப்புகள் வருடத்திற்கு 173 மில்லியனாக இருந்ததிலிருந்து, தற்போது இறப்புகளின் எண்ணிக்கையைப் பிறப்புகளின் எண்ணிக்கை விஞ்சிவிட்டதால் உலக மக்கள் தொகையானது 2050 ஆம் ஆண்டில 8 முதல் 10.5 பில்லியன் வரையில் உயரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அப்படியென்றால் இந்த முகநூலுக்குள் புதைந்துள்ளவர்களுடைய தொகை எவ்வாறு உயரும் என்று அறியக் கூடியதாக இருக்கின்றது. இந்தக் காலம் கொண்டு வந்து தந்த ஒரு காட்சியகமமே முகநூல் என்பது உண்மை. இருந்தும் இந்த முகநூலின் சாதகங்கள் பாதகங்கள் எடுத்துரைப்பது இக்கட்டுரையின் நோக்கம் அல்ல.

எப்படி இருந்தது இப்படியானது என்பதே இக்கட்டுரை. முற்காலத்தில் ஒரு விழா என்றால், அறிவித்தல்கள் கடதாசியில் பிரசுரிப்பார்கள். அயலவர்களுககுக் கொண்டு சென்று கொடுப்பார்கள். இலலையென்றால், பத்திரிகைகளில் வெளியிடுவார்கள். சங்ககாலத்திலே ஒரு இடத்தில் விழா நடைபெறப் போகின்றது என்றால், ஒவ்வொரு தெருவாகக் குயவர்கள் சென்று விழாச் செய்தியினை உரைக்கின்ற வழக்கம் இருந்தது. அரசனுடைய பிறந்தநாள், படையெழுச்சி நாள், மணநாள் போன்ற நிகழ்வுகளை முரசறைந்து அறிவிப்பார்கள். உதாரணமாக அரசனுக்கு பிறந்த நாள் என்றால், அந்தச்செய்தியை மக்களுக்கு அறிவிக்கும் போது முரசறைந்து அறிவிக்கும் வழக்கம் இருந்தது. இதனை

> **'திருநாள் படைநாள் கடிநாள் என்றிப்**
> **பெருநாட் கல்லது பிறநாட் கறையாச்**
> **செல்வச் சேனை வள்ளுவ முதுமகன்'**

என்ற பாடலடிகள் உணர்த்துகின்றன. ஒவ்வொரு விழாக்களுக்கும் ஒவ்வொரு வகையான முரசு பயன்படுத்தப்பட்டது. முரசு போர்முரசு, கொடைமுரசு, மணமுரசு என தேவைக்கேற்பப் பயன்படுத்தப்பட்டன. முரசினை வைப்பதற்கு என்று ஒரு தனிக் கட்டிலும் உருவாக்கப்பட்டு அதன் மீது வைக்கப்பட்டிருந்துள்ளன. இச் செய்தியினை பதிற்றுப்பற்று எடுத்துக்காட்டு கின்றது.

> **'செங்கள விருப்பொடு கூலம் முற்றிய**
> **உருவச் செந்திணை குருதியொடு தூஉய்**
> **மண்ணுறு முரசம் கண்பெயர்த்து இயவர்**

விழாச் செய்திகளைச் சொல்வதற்காக மணமுரசு பயன்படுத்தப்பட்ட செய்தியை மணிமேகலை எடுத்துக்காட்டுகின்றது.

> **வச்சிரக் கோட்டத்து மணங்கெழு முரசம்**
> **கச்சை யானைப் பிடர்த்தலை ஏற்றி**
> **ஏற்றுதி போர்த்த இடியுறு முழக்கின்**
> **கூற்றுக்கண் விளிக்கும் குறுதி வேட்கை**
> **முரசுகடிப் பிகூஉம் முதுகுடிப் பிறந்தோன்**


என்று மணிமேகலை கூறும். பழைமை உடைய குடியில் பிறந்தவன் வென்ற காளையின் தோலினால் போர்த்தி இடி போன்ற முழக்கத்தைச் செய்கின்ற முரசைக் கச்சையானையின் கழுத்தின் மேலே ஏற்றிக் குறுந்தடியால் அடித்து விழாச் செய்தியை ஊர் மக்களுக்கு அறிவித்தான் என் திருவிழாச் செய்தியை ஊரவர்க்கு அறிவிக்க் போது முரசு அறைந்த செய்தியை மணிமேகலை எடுத்தக் காட்டுகின்றது.

இவ்வாறு முரசு செய்கின்ற மரம், அது செய்கின்ற முறைமைகள், அதற்குக் கிடைக்கின்ற மரியாதை, பல்வேறுவிதமான முரசுகள் அவைபற்றிய விளக்கம் என்பன அகநானூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து, மணிமேகலை, பெருங்கதை போன்ற பாடல்களில் அழகாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. ஆனால், இந்த முரசு இன்று ஒரு பக்கப்பார்வையில் முகநூலுக்குள் அடங்கிவிட்டதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது.

28 ஆம் பக்கம் பார்க்க...




அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்



# ஒஸ்லோவில் எழுத்தாளர் ரூபன் சிவராஜாவின் மூன்று நூல்களின் அறிமுக நிகழ்வு

Farzan Basir

எழுத்தாளர் ரூபன் சிவராஜாவின் மூன்று நூல்களின் அறிமுக நிகழ்வை முன்னிட்டு (10.04.2022) ஒஸ்லோவில் அரங் கேற்றப்பட்ட, ஒட்டகங்களின் பயணம் என்ற அரங்காற்றுகை சுமார் இரண்டு ஆண்டு இடைவெளிக்கு பின்னர் இங்கு நேரடியாக கண்டுகளித்த ஒரு சிறந்த கலை நிகழ்வு.


ஒஸ்லோவில் எழுத்தாளர் ரூபன் சிவராஜாவின் மூன்று நூல்களின் அறிமுக நிகழ்வை நேர்த்தியாகவும் அழகாகவும் உள்ளடக்கக்கனதியுடனும் நிகழ்வினைக் கவிதா நெறிப்படுத்தியிருந்தார். எழுத்தாளர் சரவணன் ‘அதிகார நலனும் அரசியல் நகர்வும்‘ புத்தகம் குறித்த அறிமுகத்தினை வழங்கினார். பிரித்தானியாவிலிருந்து வருகைவந்த ஊடகவியலாளர் பிரேமலதா சாம் பிரதீபன் ‘கலைப்பேச்சு‘ குறித்து உரையாற்றினார். பர்கனிலிருந்து வருகை கேமச்சந்திரன் மார்க்கண்டு ‘எழுதிக் கடக்கின்ற தூரம்‘ கவிதைத் தொகுப்பினை அறிமுகம் செய்தார். எழுத்தாளர் யமுனா ராஜேந்திரன் மூன்று புத்தகங்களையும் முன்வைத்து, அவற்றின் உள்ளடக்கங்களையும் ரூபனின் எழுத்துகளின் தனித்துவமெனத் தான் கருதும் அம்சங்களையும் குறிப்பிட்டார்.

ரூபனின் “எழுதிக் கடக்கின்ற தூரம்” எனும் கவிதைத் தொகுப்பிலிருந்து தெரிவு செய்யப்பட்ட சில கவிதைகளைக் கொண்டு “ஒட்டகங்களின் பயணம்” எனும் கவிதை வரிகளை மூத்த புலம்பெயர் கலைஞ்சரான சர்வேந்திரா மற்றும் கவிதா லட்சுமி ஆகியோர் அரங்காற்றுகையாக

## புலம்பெயர் கலை வடிவங்களை புதிய பரிணாமத்துக்குள் கொண்டு செல்லும் முயற்சி



நெறிப்படுத்தி இருந்தனர். ஒஸ்லோவில் வாழும் புலம் பெயர் பின்னணியை கொண்டவர்களால் நடத்தப்பட்ட இந்த நாடக அரங்கில், எமது வாழ்வியலின் பல கூறுகள் கவிதைத்தனமாக தொட்டுச் செல்லப்பட்டன. ரூபனின் கவிதைகளில் இழையோடியிருந்த இயற்கை மீதான காதல், போருக்கு முந்திய வாழ்வின் செழுமை, அதன் பின்னரான இழப்புக்கள், மொத்த மானிட வர்க்கத்துக்குமான வலிகள், ஏமாற்றங்கள் பற்றிய விமர்சனங்கள் மட்டுமன்றி, தனி மனிதர்களாக எமக்குள் ஒளிந்து கிடக்கும் ஆணவம் அகம்பாவம் அதிகார மோகம் என்று பல உள்ளுணர்வு சார்ந்த கருத்துக்களும் அழகிய நாடக வடிவில் பகிரப்பட்டது.



புலம்பெயர் இலக்கியங்கள், அது என்ன வடிவத்தில் அமைந்தாலும் விடுதலை போராட்டம் என்ற கண்ணாடியின் தாக்கம் இன்றி அதனை பார்ப்பதும் படைப்பதும் இலகுவான காரியமல்ல. ஒரு புலம் பெயர் படைப்பாளனுக்கு, கலை உருவாக்கத்தில் விடுதலை போராட்டம் கொடுக்கும் கருத்தியல் சார்ந்த அழுத்தத்தை ஒரு சராசரி வாசகனாக என்னால் புரிந்துகொள்ள முடியும்.

ரூபனின் கவிதைகளை மையமாக வைத்து அரங்கேற்றப்பட்ட நாடகம் தமிழர்களின் விடுதலை போராட்ட வட்டத்தை தாண்டி போர் எனும் துன்பத்தின் வலி முழு மானிடத்துக்குமானது என்ற கருத்தை உரக்கச்சொன்னது. இது இலங்கைபின் புலத்தை கொண்டோரின் படைப்புக்கள், கவிதை மட்டுமன்றி அது சார்ந்த அரங்காற்றுகைகள் கூட ஒரு விரிவான பிரபஞ்சத்துக்குள் புகுவதுபோல் உணர முடிகிறது. இந்த முயற்சிகள் எமது மக்களின் கலை வடிவங்களை ஒரு புதிய பரிணாமத்துக்குள் கொண்டு செல்லும் என்பதில் சந்தேகமில்லை.

போராட்டம் அதனுடன் சார்ந்த வாழ்வின் வலி பற்றி எண்ணற்ற இலக்கியங்களில் பேசியாகிவிட்டது, இருந்தும் இந்த பிரபஞ்சம் தீர்ந்துபோகும் வரை எழுதித்தீர்க்க முடியா துன்பத்தின் கதைகள் அங்கு இன்னமும் தொக்கி நிற்கின்றன என்பது உண்மைதான். எனினும் அன்பு பற்றியும், சமூகத்தின் மீள் எழுச்சி பற்றியும் இயற்கை பற்றியும் பேசும் ஒரு பறந்து விரிந்த புதுயுகத்துக்குள் நோர்வேஜிய தமிழ் கலை இலக்கியம் கால்பதிக்க வேண்டும். ஒட்டகங்களின் பயணம் தொடரட்டும்..!



ரூபன் சிவராஜாவின் கவிதைகள் உயிர்பெற்று ஆடின...

படங்கள்: Theepan Ganesh

‘சுவிஸ் மக்களின் நம்பிக்கையான காப்புறுதிகளுக்கும், ஓய்வுகாலத் திட்டமிடலுக்கும் நிபுணத்துவ வழிகாட்டி கல்லாறு சதீஷ்”



Aadaa Finance GmbH
Dr. (h.c) Nageswaran Arulrasa D.Litt (CEO)
Eidgenössische finanzmarktaufsicht Nr.35302
Fachmann Für Versicherung & Vorsorge
Hauptstrasse 54, 6015 Luzern, Switzerland
079 8000 100 | arulnages@yahoo.com
aaDaa Finance 0798000100
finma : 34598
cicero : 25605




அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்


கடுகுமணி: 03



# கைச்சிறகாற் பார்ப்பொடுக்கும் கவ்வை

இந்த வையகத்தின் சில நாடுகளிலே பறவைகளுக்குக் கொடுக்கும் பாதுகாப்பும் மரியாதையும் எங்களை வியக்கவைக்கின்றன. யப்பானிலே நாம் நேரிலே கண்ட காட்சி ஒன்று. ஒரு தாய்ப் பறவை குஞ்சு பொரிப்பதற்காக விதியைக் கடந்து செல்கிறது. அது வீதியைக் கடக்கும் வரையும் அந்த வீதியால் வந்த வாகனங்கள் எல்லாம் பாதுகாப்புப் படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டன. எங்களுக்குப் பெரும் வியப்பாக இருந்தது. அருகில் நின்றவரிடம் இக்காட்சி பற்றிப் பேசினோம். அவர் சொன்னார்: “நீங்கள் இப்பொழுது பார்த்த காட்சியை விட இன்னும் வியப்பான காட்சியை இப்பறவை தன் குஞ்சுகளுடன் திரும்பும்போது காணலாம்” என ஒரு திகதியையும் நேரத்தையும் குறிப்பிட்டார்.

அன்று அந்த இடத்துக்கு வந்தோம். காவல் துறையினர் மிகுந்த பரபரப்புடன் யாரோ ஒரு பெரியவரை வரவேற்பதற்காக நிற்பதுபோல் மிகுந்த ஆவலுடன் வீதியின் எதிர்ப்பக்கத்தைப் பார்த்தபடியே நின்றனர். சிறிது நேரத்தால் அன்று வீதியைக் கடந்த தாய்ப் பறவை முன்னே வர பின்னால் குஞ்சுகள் பல வந்து கொண்டிருந்தன. மிக அமைதியாக தாயும் சேய்களும் வீதியைக் கடந்து சென்ற காட்சி அவற்றின் அழகினையும் நாட்டின் அழகினையும் அந்நாட்டு மக்கள் அழகினையும் நமக்குக் காட்டியது.



தகைசால் பேராசிரியர்
அ.சண்முகதாஸ்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்

இவ்வாறு குஞ்சுகளுடன் செல்லும் தாய்ப்பறவை ஏதாவது இடரெனில் உடனடியாகத் தன் சிறகினாலே குஞ்சுகளை மூடிக் கொள்ளும். இப்படி ஒரு காட்சியை பண்டைத் தமிழ் இலக்கியமாகிய முத்தொள்ளாயிரத்தில் ஒரு பாடல் காட்சிப்படுத்துகிறது. அப்பாடல் இதுதான்:

அள்ளற் பழனத்து
அரக்காம்பல் வாய்அவிழ
வெள்ளந்தீப் பட்ட
தெனவெரீஇப் – புள்ளினம்தங்
கைச்சிறகாற் பார்ப்பொடுக்கும்
கவ்வை உடைத்தரோ
நச்சிலைவேற் கோக்கோதை நாடு

சேறு நிறைந்த வயற் பகுதியில் உள்ள பெய்கைகளில் சிவப்பு நிறம் கொண்ட செவ்வல்லி மலர்கள் பூத்துள்ளன. அதனைக் கண்ட நீர்ப்பறவைகள் வெள்ளத்தில் தீப்பிடித்து விட்டது என்று அச்சப்பட்டு, தம் கைகளான சிறகுகளுக்குக் கீழே தம் குஞ்சுகளை ஒதுக்கும் துன்பமிகு ஆரவாரம், நஞ்சு பூசப்பட்டுள்ள வேலை ஏந்திய சேரமன்னன் கோக்கோதையின் நாட்டிலுள்ளவர்களுக்கு உண்டா? இல்லை என்பதை உணர்த்துவதாகவே இப்பாடல் அமைகிறது. பறவைகள் கொண்ட அச்சம் உண்மையான தீயினால் ஏற்பட்டதல்ல. எனினும் பொய்யான காரணத்தாற் கூட பறவைகள் துயரப்படாமல் இருக்கவேண்டும் என்பது உய்த்துணரக் கூடியதாக உள்ளது. இப்படியான துயரங்கூட நாட்டிலே ஏற்படக்கூடாது என்ற பண்டைய தமிழர் எண்ணத்தின் அழகினை இங்கு தரிசிக்கிறோம்.

## நெதர்லாந்து, றோர்மோண்ட் நகரசபை தேர்தலில் இரண்டாவது தடவையும்

## அமோக வெற்றி பெற்ற முதலாவது தமிழ் இளைஞர் அஜித்தன் லோகநாதன்



2022 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 14,15,16 ஆம் திகதிகளில் நடைபெற்ற நெதர்லாந்து, றோர்மொண்ட் நகரசபை தேர்தலில் இரண்டாவது தடவையாகவும் போட்டியிட்டு அமோக வெற்றிபெற்ற திரு அஜித்தன் லோகநாதன் அவர்கள் 30-03-2022 இல் அதிகாரப்பூர்வமாக றோர்மொண்ட் நகரசபையின் உறுப்பினராக (Councillor) பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டார். இவர் இன்னும் 4 ஆண்டுகளுக்கு எங்கள் நகரத்திற்காக சேவை செய்யப் போகிறார் என்பதையிட்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம். திரு அஜித்தன் லோகநாதன் அவர்கள் றோர்மொண்ட் நகரசபை தேர்தல்களில் வெற்றிபெற்ற முதலாவது தமிழ் இளைஞர் என்கின்ற பெருமையுடன் எமது றோர்மொண்ட் தமிழ்ப் பாடசாலையின் பழைய மாணவர் என்பதுடன் இவர் (நெதர்லாந்து) றோர்மொண்டில் பிறந்தவர் என்பதும் பெற்றோர் தாயகத்தில் உரும்பிராயைச் சேர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. திரு. அஜித்தன் லோகநாதன் அவர்களின் சேவை தொடர பாராட்டி வாழ்த்துகின்றோம்.

”எமது நெஞ்சம் நிறைந்த வாழ்த்துக்கள்“
தமிழ்க் கலாச்சார உதவி நற்பணி மன்ற நிர்வாகிகள் றோர்மொண்ட் தமிழ்ப் பாடசாலை நிர்வாகிகள்.




அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்

# செய்தி வாசிப்பில் எவருடைய சாயலும் இருக்கக்கூடாது என்பது எனது விருப்பம்!



**ஷாலினி பிள்ளை (இலங்கை வசந்தம் தொலைக்காட்சி செய்தி வாசிப்பாளர் – நிகழ்ச்சித் தொகுப்பாளர்)**

எனது பெயர் ஷாலினி சுப்பையா பிள்ளை (ஷாலினி பிள்ளை) நான் கிளிநொச்சியை பிறப்பிடமாக கொண்டவள். சிறுவயதிலேயே கொழும்புக்கு வந்துவிட்டேன். எனது தந்தையார் சுப்பையா பிள்ளை அம்மா சாந்தி சுப்பையா பிள்ளை அக்கா சரண்யா பிரஷாந்த், அண்ணா யஷிதரன் எனது தந்தையார் தவறி நான்கு வருடங்கள் ஆகின்றன. நான் எனது கல்வியை கொழும்பு முகத்து வாரம் இந்து கல்லூரியில் நிறைவு செய்தேன். எனக்கு சிறு வயதிலிருந்தே பரத நாட்டியத்தில் மிக பெரிய ஆர்வம் இருந்தது. என்னுடைய 8 வயதிலிருந்து பரத நாட்டியம் கற்க ஆரம்பித்தேன். பின்னர் பரதநாட்டியத்தில் இருந்த ஆர்வம் அதிகரிக்க அதன் மேற்படிப்பைத் தொடர்ந்தேன்.

பாடசாலை காலத்தில் எனக்கு பேச்சு திறன் கொஞ்சம் அதிகமாகவே இருந்தது. பொதுவாக என்னிடம் எதையும் விமர்சிக்கும் விவாதிக்கும் பழக்கம் உண்டு. ஆனால் ஊடகத்தின் மீதான ஆர்வம் என்னிடம் பெரிதாக இருந்ததில்லை. பிடித்ததை செய்து கொண்டிருந்த போது கிடைத்த ஊடகத்தில் பிடிப்பு அதிகரிக்க ஆரம்பித்தது. அதன் பின்னர் எனது முழு நேர பணியாக ஊடகம் உருவானது.

எனது 20 ஆவது வயதில் தனியார் வெளிநாட்டு வானொலியில் என்னுடைய ஊடகப் பயணம் தொடங்கியது. என்னுடைய 22 வயதில் தொலைக் காட்சியில் பணியாற்ற ஆரம்பித்தேன். அதன் பின் மீண்டும் மற்றுமொரு தனியார் வெளிநாட்டு வானொலியில் அறிவிப்பாளராக இணைந்தேன்.

பின்னர் தனியார் தொலைக் காட்சி ஒன்றில் இணைந்து சுமார் 5 வருடங்கள் செய்தி வாசிப்பாளராகவும் செய்தி தயாரிப்பாளராகவும் நிகழ்ச்சித் தொகுப்பாளராகவும் பணிபுரிந்தேன். தற்போது நான் வசந்தம் தொலைக்காட்சியில் செய்தி வாசிப்பாளராகவும் நிகழ்ச்சி தொகுப்பாளராகவும் பணிபுரிந்து வருகின்றேன். வசந்தம் தொலைக்காட்சியில் பணிபுரிவதை எண்ணி மிகவும் பெருமை கொள்கின்றேன்.

பொதுவாக என்னுடைய செய்தி வாசிப்பிலோ அல்லது நிகழ்ச்சித் தொகுப்பிலோ எவருடைய சாயலும் இருக்கக் கூடாது என்பது எனது விருப்பம். செய்தி மீதான ஆர்வம் இல்லாமல் நிச்சயமாக அந்த செய்தியை எம்மால் சிறப்பாக வாசிக்க முடியாது என்பது எனது கருத்து.

கலைஞர்களுக்கு அங்கீகாரம் கொடுப்பது நிச்சயமாக விருதுகள். ஆனால் விருதுகளை கொண்டு ஒருவரின் திறமையை மதித்து விட முடியாது. இதே நேரம் என்னுடைய குடும்பம் எனக்கான ஆதரவை எப்போதும் வழங்கி வருகின்றார்கள்.

எனது ஆடை அணிகலண்களை தேர்வு செய்து தருபவர் எனது அம்மா சாந்தி சுப்பையாபிள்ளை. அவர் ஒரு சிறந்த தையற்கலை நிபுணர் என்பதால் ஆடைகளை வடிவமைத்து தருவதுடன் மரியாதையாக அணிவதற்கும் கற்றுக்கொடுத்தார். இத் தருணத்தில் என் அம்மாவிற்கு நன்றி.



பல பரிமாணங்கள் கலந்த ஓர் ஆளுமையுடைய உமாச்சந்திரா பிரகாஷ் அவர்களை நேர் கண்டதில் மகிழ்ச்சி.

## ஊடகங்களில் பணிபுரியும் பெண்களுக்கு பல சவால்கள் உண்டு!

வேலைக்கு செல்லும் பெண்கள் பொதுவாக பல இன்னல்களுக்கு முகம் கொடுக்க நேரிடும், அதிலும் ஊடகங்களில் பணிபுரியும் பெண்களுக்கு பல சவால்கள் நிறைந்து காணப்படுகின்றன. பொதுவாகப் பாலியல் சார்ந்த பிரச்சினைகளுக்கு ஊடகத்துறை சார் பெண்கள் முகம்கொடுக்க நேரிடும் என்பதான கருத்தோட்டம் காணப்படுகின்றது. எனினும் இன்றைய பெண்கள் இக் கருத்துகளைத் தகர்த்து, தமது திறமைகளை நிலை நிறுத்த வேண்டும். ஆகவே பெண்களின் பாதுகாப்பு குறித்து அச்சுறுத்தி அவர்களின் எதிர்காலத்தை வீணடிக்கக்கூடாது என்பதே என் கருத்தாகும்.

போட்டி நிறைந்த ஊடகத்துறையில் சகிப்புத் தன்மை, பொறுமை மிக முக்கியமாக விமர்சனங்களை ஏற்றுக் கொள்ளுதல், ஏற்ற இறக்கங்களை தாங்கி கொள்வதுதான் அவற்றை ஏற்று கொள்வதற்கான மனப்பாங்கு தற்போது என்னிடம் உருவாகியுள்ளது. ஊடகம் சார்ந்த அனுபவம் என்றால் ஊடக பயணமே ஒரு மிகப் பெரும் அனுபவம் தான்.

என்னுடைய எதிர்கால திட்டமானது ஊடகத்துறையில் ஓர் உயர்ந்த பதவியில் அமர வேண்டும் என்பதே. இத் தருணத்தில் வசந்தம் தொலைக்காட்சி அலைவரிசை பிரதானி எஸ்.கோணேஸ்வரராஜா மற்றும் செய்திப் பிரிவின் பிரதி பொது முகாமையாளர் (DGM) சுதர்மன் ரதலிய கொட மற்றும் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்கள் வசந்தம் செய்தி தயாரிப்பாளர்களுக்கும் நன்றியினை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**வெற்றிமணி பத்திரிகை எனக்கு கொடுத்த இந்த கௌரவத்திற்கு மிக்க நன்றி.**




அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்

08 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## பிளவு...

சந்தேகத்தோட மறுத்திட்டு நிக்க, சில அம்மம்மா மார் மட்டும் சேந்து பக்கத்து வீட்டை போய் ஏதோ சமைச்சுக்கொண்டு வர அவசரமா வெளிக்கிட்டிச்சினம்.

ஆம்பிளைகளை மட்டும் வரச் சொல்லி Ground அரசமரத்தடியில போய் நிண்டா, கால் வரை வெள்ளம். இந்து க்கல்லூரி march past parade மாதிரி எங்களை கிரவுண்டைச்சுத்தி வரச்சொல்லிச்சனம். ஏதோ fashion walk மாதிரி இடைவெளி விட்டு ஒவ்வொருத்தரா நடக்கப் பண்ணி, வடக்குப் பக்கம் eyes right க்குப் பதிலா ஐஞ்சு நிமிசம் ஒரு ஓட்டை போட்ட sentry point க்கு முன்னால நிப்பாட்ட, தலை ஆடினால் உள்ள இல்லாட்டி வெளிய எண்ட விளையாட்டிலயும் தப்பி திருப்பி camp க்கு வர, வராத பிள்ளைகளின்டை அம்மா மார் அழத்தொடங்க வந்த தன்டை பிள்ளைக்கு அம்மாமார் சாப்பாட்டை தீத்தத்தொடங்கச்சினம்.

ஒண்டாப்போய் ஒவ்வொருவராய் திரும்பி வந்தது, அடுத்தவர்களின் உணர்ச்சியைப் பாக்காம நான் மட்டும் தப்பினது survival of the fittest எண்டு கூர்ப்பின் தத்துவம் பிழையாக விளங்கப்பட்டதும், இந்த நாளில் தான். இது தான் எங்கள் வாழக்கையில சமூகம் தாண்டி தனி மனிதனாக வாழக்கையில் தப்பி னால் சரி எண்டு சமூகம் பிளவு படத்தொடங்கின நாள்.

10 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## கடன் சூழ் உலகம்




அப்படியானால், கடன் வாங்கும்போது, நாம் கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கி யமான அம்சங்கள் என்னென்ன.? கடன் நமது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் செய்யும். அதேநேரத்தில் வரம்பு மீறிச் சென்றால் நமது வாழ்க்கைத் தரத்தை சீர்கு லைக்கவும் செய்துவிடும். சரியாகப் பயன்ப டுத்த தெரிந் தால் கடன் வாங்குவதும் நல்ல வாய்ப்புதான். ஆனால் வாங்குவதற்கு முன் ஒன்றுக்கு பத்து முறை யோசித்து செயற்ப டுதல் அவசியம். ஏனெனில்,இன்றைக்கு வரும் 'குடும்பத்துடன் தற்கொலை' என்ற செய்திகள் நூறு சதவிகிதம் கடன் சுமை யின் பரிசேயாகும். இந்த மாதிரியான நிஜ வாழ்க்கை கதைகள், நம்மைச் சுற்றிலும் ஏராளமாய் இருக்கின்றன. "கடன் " அது தான் அடிப்படை காரணம். மிக மோசமான, அருவருக்கத்தக்க செயல்கள் கடன் வசூ லிப்பவர்களால் கடனை வசூல் செய்ய பயன்ப டுத்தப் படுகின்றன. கணவர் கடன் வாங்கி யிருந்தால், நா கூசாமல் "மனைவியை அனுப்பிவை" என்கிற அளவுக்கு அநாக ரிகமும், அராஜகமும் சர்வ சாதாரணமாகக் கையாளப்படக்கூடும். கடனைத் திருப்பி செலுத்த முடியாமல் இருக்கும் அவஸ்தை களும், அவமானங்களும், அலைக்கழிப் புகளையும் கொண்டு ஒரு நீண்ட தொடர்கதை யே எழுதலாம். கடன் சுமை அழுத்தும்போது சேர்த்துவைத்த நகை தொடங்கி வீடுவாசல் இருக்கின்ற சொத்தெல்லாம் கையைவிட்டுப் போகும் நிலை உருவாகக்கூடும். எனவே எல்லாவற்றைலுமே ஒரு கையாளும் திறன் வேண்டும். எதிர்காலத் தேவை அறிந்து கடன் வாங்குவது மிகவும் அவசியமானவொன்று. ஏனெனில், இன்றைய வருமானத்தையும் செலவையும் மட்டும் மனதில் வைத்து கடன் வாங்கக் கூடாது. எதிர்காலத்தில் வருமானம் அதிகரித்தாலும் தேவைகள் பல மடங்கு அதிகரிக்க வாய்ப்புகள் உள்ளன. இதனால் எதிர்காலத்தில் குழந்தைகளின் கல்வி, பெற் றோர்களின் பராமரிப்புச் செலவு, மருத்து வச் செலவு ஆகிய தேவைகளை மனதில் வைத்து கடன் வாங்குவது நல்லது. எந்தக் கடன் வாங்குவதாக இருந்தாலும் அதை நம் 50 வயதுக்கு முன்பே திரும்பச் செலுத்தும் வகையில் திட்டமிட்டுக்கொள்வது நல்லது. ஏனெனில்,50 வயதுக்குப் பிறகு கடன் இரு ந்தால், பணி ஓய்வுக்குப் பிறகும் வேலைக்குப் போக வேண்டிய சூழ்நிலை உருவாகும். பணி ஓய்வின்போது நம்முடைய உடல்நலம் எப்படி இருக்கும் என்பது தெரியாது. மேலும்,50 வயதில்தான் குழந்தைகளின் உயர்கல்வி, திருமணம் போன்ற செலவுகள் வரும். அந்தச் சமயத்தில் கடன் அதிகம் இரு ந்தால், வாழ்க்கையை மகிழ்ச்சியாகக் கழிக்க முடியாது அல்லவா ?

எல்லாவற்றுக்குமே கடன் கொடுக் கிறார்களே என்பதர்க்காக எந்த வரம்புமின்றி தேவை யற்றவற்றையெல்லாம் வாங்கிக்கு வித்து நம் வருமானத்தை கடனுக்கும் வட்டிக்கும் தாரைவார்ப்போமாயின் அதில் எந்தவொரு புத்திசாலித்தனமும் இராது. மேலும், சந்தர்ப்ப சூழ்நிலை ,வாழ்க் கையையே புரட்டிப்போடும் சங்கடங்கள் போன்றவற்றால் நாம் வாங்கிய கடனை குறித்த தவணைக்குள் செலுத்த தவறி கடன் கொடுநரால் தொடர்ச்சியாக நெருக்கப்ப டுவோமானால்? இந்த"breaking point" இல்தான் நண்பர்கள் விலகுவார்கள், அலுவ லகத்தில் எள்ளி நகையாடுவார்கள் "சிட்டைக்கு" வாங்குவதுதான் (வட்டிக்கு வட்டி) ஒரே வழி என நினைப்போமாயின் நம்மைக் காப்பற்ற கடவுளாலும் இயலாதுபோய்விடும். இந்த நிலையில்தான் மன ரீதியான உள ரீதியான சித்திரவதைகள் ஆரம்பிக்கின்றன. மனோதிடம் இல்லாதவர்களாயின் உயிரை மாய்துகொள்வர். பலருக்கு depression ஏற்படுகிறது. ஏனெனில், நம்முடைய ஏட்டு க்கல்வியானது பணமில்லாத நிலையினை எப்படி எதிர்கொள்வது என்பதை சொல்லித்த ருவதில்லையே ?

அதுமட்டுமா? குறித்த தவணைக்குள் கடனை திருப்பிக்கொடுக்க இயலாது போனால் கடன்கொடுத்தவரை சந்திக் கவே நம்மில் பலர் பயப்படக்கூடும். ஆனால், அது முற்றிலும் தவறு முடிந்தவரை அவர்களிடம் குறித்த தவணைக்கு முன்பாகவே சென்று நிலைமையினை விளக்கி அவகாசம் வாங்கி க்கொள்வது நல்லது அல்லவா? ஒருவேளை நீங்கள் கடன் கொடுத்த ஒருவராயின் "கறக்காத பாலும் கேட்காத கடனும் திரும்ப வராது"என்பதற்கமையகொடுத்தது திரும் பிவரவேண்டுமாயின் அடிக்கடி கேட்டுக் கொண்டேயிருக்க வேண்டு மாம்.

எது எப்படியோ கடன் என்ற ஓர் விடயத்தில் எந்த அளவுக்கு நன்மையுண் டோ அந்த அளவுக்கு நம்முடைய அணுகுமு றையைப்பொறுத்து தீமையும் உண்டு. எனவே தீர்க்கவியலாத பிரச்சினையென்று எது வுமில்லை, பணத்தை சம்பாதித்து கடனை கட்டியே தீருவேன் என செயல்படுங்கள். நம்மால் முடியும். நம் குடும்பத்துக்கு பெரும் கடனையும், அவமானத்தையும் விட்டுவிட்டு உயிரைபோக்கிக்கொள்வதில் எவ்வித பய னுமில்லை. கடன் பிரச்சினைகளை ஒரு சவாலாக மாற்றுங்கள், எழுந்து நில்லுங்கள். நிச்சயம் மீண்டுவிட முடியும். ■

19 ஆம் பக்கத் தொடர்ச்சி...

## விரல் சொடுக்கும் போது ஏன் சத்தம் கேட்கிறது?

சொடுக்கும் பொழுது வரும் அந்தச் சத்தம் எவ்வாறு தோன்றுகிறது? இதற்குரிய பதிலை கண்டுபிடிக்க 1947ம் ஆண்டிலே ஆரம்பித்து விட்டார்கள். அன்றிலிருந்து பல்வேறு ஆராய்ச்சி குழுவினர் வெவ்வேறு காரணங்களை முன்வைத்தார்கள், ஆனால் இதில் சரியான விளக்கம் எது என்பது யாராலும் சொல்ல முடியவில்லை. எனவே இந்த மர்மத்துக்குப் பின்னால் இருக்கும் உண்மையைக் கண்டு பிடித்தே ஆகவேண்டுமென்று நினைத்து ஒரு புதிய முயற்சியை ஆரம்பித்தார்கள். 'Pull my finger study' எனும் பெயரில் அல்பேர்ட்டா பல்கலைக்கழகத்தில் (ருளைநசளவைல ழக யுடடிநசவய) ஒரு புதிய பரிசோதனை ஒன்றைச் செய்தார்கள். அது எப்படி என்றால் ஒரு நபரை விரல் சொடுக்கச் சொல்லி விட்டு அவர் சொடுக்குவதை காந்த அதிர்வு அலை வரைவு அதாவது MRI என்று அழைக்கப்படும் 'Magnetic Resonance Imaging' ஊடாக அந்தச் சம்ப வத்தை அவதானித்தார்கள். அப்பொழுது தான் ஆராய்ச்சியாளர்களுக்கு உண்மை தெரிய வந்தது. நமது மூட்டுகளுக்கிடையே Synovial Fluid என்று அழைக்கப்படும் ஒரு நீர்மம் உள்ளது. விரல் சொடுக்கும் போது ஒரு குறுகிய நேரத்தில் நமது மூட்டு இணைப்புகளுக்கு இடையே 2,3-4,5 mm அளவான ஒரு இடைவெளி ஏற்படுகி ன்றது. அப்படி ஏற்பட்ட அந்த இடைவெளிக் குள் உடனடியாக அந்த நீர்மம் செல்ல முடியாததால் வெற்றிடம் ஏற்படும் போது தான் அந்தச் சத்தம் கேட்கின்றது. அவ்வளவு தான்! இது தான் இந்த மர்மமான விஷ யத்துக்குப் பின்னால் இருக்கும் அறிவியல் விளக்கம் ஆகும்.

ஆனால் இன்று வரை, ஏன் இந்த ஆராய்ச்சியின் ஊடாகக்கூட, தெரியாத விஷயம் என்ன தெரியுமா? இப்படி விரல் சொடுக்குவது உடலுக்கு நல்லதா இல்லை தீங்கானதா என்பது தான் இன்னும் தெரியாத விஷயம் ஆகும். எனவே, அதற்கும் விரைவில் பதிலை கண்டறி வார்கள் என்று நம்புவோம். ■







அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்

# “அடக்கமாகும் வரை அடக்கமாக இரு” என்று உணர்த்தும் நினைவுச் சின்னங்கள்

– கவிஞர் வாலி






01.”இந்தக் கடிதம் கொண்டுவரும் பையனிடம் இருபதோ முப்பதோ கொடுத்து அனுப்பினால் நலமாயிருக்கும்.!’

இப்படி ஒரு கடிதத்துடன் என் வீட்டிற்கு ஒரு பையன் வரும் போதெல்லாம், எனக்கு வியர்த்துக் கொட்டும். எவ்வளவு பெரிய எழுத்தாளர் எப்படியிருந்தவர்.. அவருக்கா இப்படிஒரு சிரமம்..?

02. ஒரு கம்பெனியில் பாட்டு “கம்போஸிங்’. எம்.எஸ்.வி-யுடன் அமர்ந்திருக்கிறேன். கம்பெனி மாடியில் குடியிருக்கும் ஒருவர் “ஹாய் வாலி ..!’ என்று இறங்கி வருகிறார். சிரிக்கச் சிரிக்க அளவளாவி விட்டு, ““வாலி..! உன் டிரைவரை விட்டு, ஒரு பாக்கெட் “பர்க்லி’ சிகரெட் வாங்கிண்டு வரச் சொல்லேன். என்னோட பிராண்ட் 555 வாங்க இப்பெல்லாம் வசதியில்லே...!““

எவ்வளவு பெரிய நடிகர்..! எம்.ஜி.ஆர், சிவாஜி படங்களில் அவர்களை விட அதிகம் சம்பளம் வாங்கியவர்! படுக்கையறைக்கே கார் வருகிற மாதிரி பங்களா கட்டியவர்! எங்கே போனது அந்த வாழ்வும் வளமும்..?

03. என் வீட்டு வாசலில் ஒரு டாக்ஸி. ஒரு நடிகை. ஒரு காலத்தில் தமிழ்திரையுலகின் முடிசூடா அரசி. என்னைப் பார்க்க வந்தவர், “வாலி சார்.. எனக்கு ஒரு நாடகம் எழுதிக் கொடுங்க் ஒரு ட்ரூப் வெச்சு, நடத்தலாம்னு இருக்கேன்“ என்று மெல்லிய குரலில் சொன்னார்.

04. சென்னை எழும்பூர் ரயில் நிலையம். சிமென்ட் பெஞ்சில் ஒருவர் அமர்ந்திருக்கிறார். இன்றைய தலைமுறைக்கு அவரைத் தெரியவில்லை. நான் கவனித்து விட்டேன்.

ஓடிப் போய் அவரருகே சென்று, “நமஸ்காரம் அண்ணா..! நானும் உங்க மாதிரி திருச்சிக்காரன் தான். இப்போ, சினிமாவில பாட்டு எழுதிண்டிருக்கேன். என் பேரு வாலி’ என்று அறிமுகப்படுத்திக் கொண்டு, அவரை வணங்குகிறேன். “ஓ நீங்கதான் அந்த வாலியா..?’ என்று என் கைகளைப் பற்றுகிறார். அவர் தொட மாட்டாரா என்று தமிழர்கள் ஏங்கித் தவமிருந்த காலம் ஒன்று உண்டு. இன்று அவர் என்னைத் தொடுகிறார். நான் சிலிர்த்துப் போகிறேன்.

அவர் தொட்டதால் அல்ல.எந்த ரயில் நிலையத்தில் அவர் ரயிலிருந்து இறங்கவிடாமல் மக்கள் அலை மோதினார்களோ அங்கே கவனிக்க ஆளில்லாமல் தனியாக அவர் அமர்ந்திருந்த நிலையை பார்த்து.காலம் எப்படியெல்லாம் தன் ஆளுமையை காட்டுகிறது. எண்ணிப் பார்க்கிறேன், அந்தப் பழைய நிகழ்வுகளை..

01. கடிதம் அனுப்பிப் பணம் கேட்டவர், “கண்ணகி’க்கு உயிர் கொடுத்த, உலகு புகழ் உரையாடல்களை எழுதிய திரு .இளங்கோவன்.

02. என்னிடம் சிகரெட் கேட்டவர் “மாடி வீட்டு ஏழை’யான திரு.சந்திரபாபு அவர்கள்.

03. நாடகம் எழுதித் தரக் கேட்டவர்– நடிகையர் திலகம் திருமதி.சாவித்திரி அவர்கள்.

04.எழும்பூர் ரயில் நிலையத்தில் எவர் கவனத்தையும் ஈர்க்காமல் அமர்ந்–திருந்தவர் – தமிழ் சினிமாவின் முதல் வெள்ளித்திரை நட்சத்திரம் – திரு. எம். கே.தியாகராஜ பாகவதர்.

இவர்களைவிடவா நான் மேலானவன்? அன்று முதல் நான், “நான்’ இல்லாமல் வாழப் பயின்றேன்.!

இதுதான் மனிதவாழ்க்கை: கவிஞர் வாலி நினைவு நாடாக்கள்.







அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்

## 13 ஆம் பக்கத் தொடர்ச்சி... யேர்மனியில் சிறப்பாக இடம்பெற்ற

கோவிட் காலத்தில் அடைபட்டு இருந்த ஆடற்கலை அரங்கேற்றங்கள் மீண்டும் மக்கள் முன்னிலையில் வந்து அரங்கேற்றம் காண்பது, மனதிற்கு ஆனந்தத்தையும், உற்சாகத்தையும் தந்தது. பார்வையாளர்களின் கரவொலியே சான்று,பரதத்திற்கு எவ்வளவு தாளம் முக்கியமோ, அதுபோல கலைவளர கரவொலி முக்கியம். இது ஆயிரம் லக்குகளை( Like) விட ஆனந்தம் தரும்.

பிரதம விருந்தினர் மதிவதனி சுதாகரன், மாணவியினதும் குருவினதும், திறமைகளை துல்லியமாக எடுத்துரைத்தார். திருமதி சாவித்திரி சரவணன் அவர்களது முதல் மாணவியான யனுஷா பிரதீப் அவர்களின் அரங்கேற்றம் இதே மண்டபத்தில் அன்று நடைபெற்றது, இன்று அவர்களது மாணவி அபிரா ரவீந்திரநாதன் அவர்களின் அரங்கேற்றம் நடைபெறுகின்றது. எனது மாணவியின் மாணவி அரங்கேற்றம் காணும் இந்த நிகழ்வு எவ்வளவு பெருமிதம் அடைய வைக்கும் என்பதனை கலைஞர்கள் நன்கு உணர்வார்கள் என்றார்.

வெற்றி மணி ஆசிரியர் தனதுரையில்‘ அன்று யேர்மனியில் விதைக்கப்பட்ட விதைகளின் அறுவடைக்காலம். இக்காலத்தில் மாணவர்கள் விதைத்தவர்களை மறவது அவர்களுக்களுக்கு நன்றி உள்ளவர்களாக அவர்களது பெயரை காலம் எல்லாம் சொல்லவேண்டும்.‘என்றார். வெற்றிமணி சார்பாக அபிரா ரவீந்திரநாதன் அவர்களுக்கு வளர்கலை விருது வழங்கி கௌரவித்தார். மேற்படி விருதை மாணவியின் குரு திருமதி யனுஷா பிரதீப் அவர்களின் குருவான சாவித்திரி சரவணன் வழங்கியது மேலும் சிறப்பாக அமைந்தது.

பக்கவாத்திய கலைஞர்களாக, நட்டுவாங்கம் திருமதி யனுஷா பிரதீப், பாட்டு, திரு. நீரூஜன்.ஜெகசோதி,மிருதங்கம்,திரு.ருக்ஷன். சிறீரங்கராஜா,வயலின்,பிரதிப் கனகலிங்கம், புல்லாங்குழல் சுப்பிரமணிய சிவா, ஆகிய இளைஞர் அணி அலங்கரித்தது. நிகழ்ச்சியை திருமதி பென்சிகா. அல்பேர்ட். பொன். பொஸ்கோ சிறப்பாக தொகுத்து வழங்கினார். ■

## 02 ஆம் பக்கத் தொடர்ச்சி.... நான் ஏன் ஒரு தனி வாழைப்பழம்...

எடுப்பவர்கள் அதிலிருந்து, எடுத்து உதவலாம். இந்த உதவி உங்களுக்கு ஏதோ ஒரு விதத்தில் உங்களுக்கே நன்மையாக வரும் என்பதை நம்புங்கள். தனிப்பழமும் வாழைப்பழம்தான் நம்புங்கள், பிறரையும், நம்பவையுங்கள். இதனை நமது தமிழ் கடைகளிலும் பின்பற்றுங்கள். கப்பல்பழம், இதரைப்பழம், கதலிப்பழம், இவை, தனித்திருந்தாலும் அவை அவற்றின் சுவைதான் மாறுமா? ■

## 22 ஆம் பக்கத் தொடர்ச்சி... முரசுக்குப் பின்னால் இன்று

இதேபோல் 1987 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் கல்வி, அறிவியல், பண்பாட்டு நிறுவனத்தால் (UNESCO) உலகப் பாரம்பரியச் சின்னமாக அறிவிக்கப்பட்ட தஞ்சைப்பெரிய கோயிலை எடுத்துப் பார்த்தால் அது கட்டப்பட்ட காலப்பகுதியில் வேதம் ஓதுவார் இல்லங்கள், வியாபார ஸ்தாபனங்கள், தேவதாசிகளின் இல்லங்கள், நடன ஆலயங்கள், இசைக் கல்லூரிகள், திண்ணைக் பள்ளிக் கூடங்கள் போன்றன கோயிலுக்குரியதாக கட்டப்பட்டிருந்தன எனக் கற்றிருக்கின்றோம்.

இங்கு முகநூல் பல விடயங்களைத் தனக்குள் அடக்கி எம்மவரிடையேயும் உயர்ந்து நிற்பதை 2022 ஆண்டு காலப் பகுதியில் அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. ■

## 09 ஆம் பக்கத் தொடர்ச்சி... உகாண்டா கரன்சியுடன் இலங்கையில் இருந்து சென்ற விமானங்கள்

கொண்டு செல்கிறார்களோ என்ற தெளிவான சந்தேகம் எழுந்துள்ளதாக அவர் கூறினார். இதேவேளை,ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி ராஜித்த சேனாரத்ன, உகண்டாவிலிருந்து வரவழைக் கப்பட்ட ஜெட் விமானத்தின் ஊடாகவே, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவின் ஆலயங்களுக்கு சென்றதாக குறிப்பிட்டார். தென் இந்தியாவிற்கு இலங்கையிலிருந்து ஒன்றரை மணி நேரத்தில் செல்ல முடியும் எனக் கூறிய அவர், அதற்காக 20 மணி நேரம் செலவிட்டு உகண்டாவிலிருந்து ஜெட் விமானத்தை வரவழைத்தது தொடர்பாகவும் சந்தேகம் எழுப்புகிறார்.

உகண்டாவிற்கு பணம் அச்சிடப்பட்டு கொண்டு செல்லப்பட்டதாக தற்போது கூறப்படும் நிலையில், இதற்கு முன்னர் உகண்டாவிற்கு யார் பணம் அச்சிட்டார்கள் என்றும் அவர் கேள்வி எழுப்பினார். மூன்று விமானங்கள் நிரம்பும் வகையில் அச்சடிக்கப்பட்ட நோட்டுகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

### திடீர் சர்ச்சை ஏன்?

2020-2021 ஆண்டில் ஆளும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியின் போது இலங்கை நாணய அச்சடிக்கும் உள்ளூர் அச்சகத்தின் விவரங்கள் பற்றிய தகவல்கள் சில ஊடகங்களில் வெளியாயின. பிரதமரின் இல்லமான “அலரி மாளிகை‘ பகுதியில் இருந்து லாரிகள் நிறைய பணத்தை ஏற்றிச் சென்றதாக அந்த செய்திகளில் கூறப்பட்டிருந்தன.

இலங்கை ஏற்கெனவே பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்கும் வேளையில் திடீரென அதிபர் கோட்டாபயவுக்கும் மஹிந்தவுக்கும் எதிரான மக்கள் போராட்டம் நாளுக்கு நாள் வலுப்பெற்று வருகின்றன. இந்த போராட்டத்தை பலவீனப்படுத்த அவசர நிலை மற்றும் மேலதிக கட்டுப்பாடுகள் அமல்படுத்தப்பட்டன. ஆனாலும், பொது மக்கள் இந்த தடைகளை பொருட்படுத்தாமல் வீதிகளில் இறங்கி போராடினார்கள்.

உகாண்டா நாடு ஏற்கெனவே தனது மோசமான நிதி நிலைமை காரணமாக, சர்வதேச நிதி அமைப்புகளால் ‘கிரே லிஸ்ட்‘ பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது, இது நாடுகளின் நிதி அமைப்புகளின் பாதுகாப்பு அல்லது அபாயத்தின் அளவைக் காட்டும் ஒரு பட்டியலாகும். இந்த நிலையில், “தடுப்புப் பட்டியலில்“ தரமிறக்கப்படுவதைத் தவிர்க்க, உகாண்டா மே 2022க்குள் திருத்தப்பட்ட நிதி அறிக்கையை சர்வதேச அமைப்புகளிடம் சமர்ப்பிக்க வேண்டும். இந்த நிலையில், 1986 முதல் 2021 வரை உகாண்டாவின் வெளிநாட்டு கையிருப்பு சுமார் 1.5 பில்லியன் அமெரிக்க டாலர்களாக இருந்தது. இருப்பினும் 2021 இல் அந்த எண்ணிக்கை 4.4 பில்லியன் அமெரிக்க டாலர்களாக உயர்ந்துள்ளது என்றும் சமங்கிலி வனிதா பலவேகயவின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ஹிருணிகா பிரேமச்சந்திர கூறினார்.

இத்தகைய சூழலில் நிதி மற்றும் பணப் பாதுகாப்பு தொடர்பான பல பிரச்னைகளைக் கொண்ட ஆப்ரிக்க நாடான உகாண்டாவிற்கும் இலங்கைக்கும் இடையில் நடந்த பரிவர்த்தனைகள் தொடர்பான தகவல், இலங்கையர்கள் மத்தியில் கவலைகளை அதிகரித்துள்ளது. ■

நன்றி:பி.பி.சி.- ஈழநாடு.18.04.2022

## 05 ஆம் பக்கத் தொடர்ச்சி... எரிபொருள் தட்டுப்பாட்டால் மீன் விலை சரிவு!

கொள்முதல் செய்கிறார்கள். 700 வாங்குவதற்குக்கூட சில நேரத்தில் ஆட்கள் இல்லாமல் இருக்கு. கொழும்புக்குக் கொண்டு போய் விற்கலாம் என்றால், வாகனத்திற்கு டீசல் இல்லை. அப்படியானால் நாங்கள் படிக்கும் நண்டை என்னதான் செய்வது? அந்த தொழிற்சாலைகள் மூடப்பட்டிருப்பதால தீவகத்தில பாரிய பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது“ என்கிறார் யாழ்ப்பாண கடற்தொழிலாளர்களின் கூட்டுறவு சங்க சமாஜத்தின் தலைவரான அன்னலிங்கம் அன்னராசா.

ஊர் காவற்துறை பிரதேசத்தில் செயல்படும் நண்டு பதப்படுத்தும் தொழிற்சாலைகளில் வேலை பார்ப்பவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்கள். பல தருணங்களில் இந்தப் பெண்களின் வருவாயிலேயே குடும்பம் நடக்கிறது. ஒவ்வொரு தொழிற்சாலையிலும் 80 முதல் 100 பேர் வேலை பார்க்கிறார்கள். ஆனால், இப்போது தொழிற்சாலை மூடப்பட்டிருப்பதால் திகைத்துப் போயிருக்கிறார்கள் இவர்கள்.

நண்டு பதப்படுத்தும் தொழிற்சாலையில் வேக வைத்த நண்டின் தசைப் பகுதியைப் பிரித்தெடுத்து அவற்றை உறையச் செய்து, வேறொரு புராசஸிங் மையத்திற்கு அனுப்புவது இவர்களது வேலை. இவர்கள் ஒவ்வொரு நாளும் நண்டையும் இறாலையும் எந்த அளவுக்கு பிரித்தெடுக்கிறார்களோ அந்த அளவுக்கு அவர்களால் வருவாய் ஈட்ட முடியும். ஒரு மாதத்திற்கு சராசரியாக 40,000 இலங்கை ரூபாயிலிருந்து 60,000 ரூபாய்வரை சம்பாதிக்க முடியும். தொழிற்சாலை இயங்க ஒரு வாரத்திற்கு 200 லிட்டர் டீசல் தேவை. இந்த டீசலைக் கேட்டு மாவட்டச் செயலகத் திற்கும் பெட்ரோலிய கூட்டு ஸ்தாபனத்திற்கும் மனுக்களைக் கொடுத்தும் ஒரு பயனும் இல்லை“ என்கிறார்கள்.

“40,000 சம்பளம் எடுக்குற இடத்தில இப்போ 10,000 சம்பளம் எடுக்குற மாதிரி கூட இப்ப வேலை இல்ல. இப்ப சாமான் விக்கிற விலைவாசியில சாப்பாட்டுக்கு எடுக்கிறதா இல்லை பிள்ளைகளுக்கு சேமிக்கிறதா?“ எரிபொருள் விலையேற்றம், தட்டுப்பாடு, பிடித்த மீன்களை நல்ல விலைக்கு சந்தைப்படுத்த வழியில்லாதது, உணவுப் பொருட்களின் விலையேற்றம், வருவாய் இழப்பு என பல முனைத் தாக்குதலுக்கு உள்ளாகியிருக்கிறது வடபகுதியின் மீனவ சமூகம். ■









அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்

03 ஆம் பக்கத் தொடர்ச்சி...

இந்த இரண்டினதும் விலைகள் அதிகரிக்கப்படுவதன் பிரதிபலிப்பாக உணவுப் பொருட்களின் விலைகள், போக்குவரத்து கட்டணம் என்பனவும் உயர்ந்தது. ஏற்கனவே தாங்க முடியாத விலைவாசி உயர்வை எதிர்கொள்ளும் மக்கள் நள்ளிரவு எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டதையடுத்து செவ்வாய் அதிகாலை 1.00 மணிக்கே வீதிகளில் இறங்கினார்கள். எரிபொருள் விலை அதிகரிப்பது ஒருபுறம், அதனைப் பெறுவதற்கு மணிக்கணக்கில் வரிசையில் காத்திருப்பது என்பது மறுபுறம் மக்களை சீற்றமடையச் செய்ய அவர்கள் தாமாகவே நள்ளிரவைத் தாண்டி வீதிகளில் இறங்கினார்கள்.

ரம்புக்கனையில் மட்டுமன்றி - நாட்டின் 15 க்கும் அதிகமான நகரங்களில் இவ்வாறு நள்ளிரவிலேயே வீதியில் இறங்கிய மக்கள் போராடத் தொடங்கினார்கள். ரம்புக்கனையில் வீதிப்போக்குவரத்து மட்டுமன்றி - ரயில் போக்குவரத்தும் தடுக்கப்பட்டது. கட்டுப்பாட்டை ஏற்படுத்த கண்ணீர்ப்புகை, தடியடி, நீர்த்தாரை என்பனவற்றை பயன்படுத்தி தாக்குதல் நடத்தியபோதிலும், சீற்றமடைந்த மக்களை கலைக்க முடியாமல் போகவே இறுதியில் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்த வேண்டியிருந்தது.





சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சுவார்த்தை நடத்தும் போது - பொருளாதாரத்தை சீரமைப்பதற்காக முன்வைக்கப்படும் நிபந்தனைகளை இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொள்வது தவிர்க்க முடியாததாக இருக்கும். இதற்காகத்தான் கடன் மீளளிப்பை இடைநிறுத்துவது என்ற அறிவிப்பை இரு வாரங்களுக்கு முன்னர் அரசாங்கம் வெளியிட்டிருந்தது. இந்த அறிவிப்பு - இலங்கையின் மீதான நற்பெயரை - நம்பகத் தன்மையை பாதிப்பதாக இருக்கும் என்றாலும் கூட, இன்றைய காலகட்டத்தில் தவிர்க்க முடியாத ஒரு நடவடிக்கையாகவே கருதப்படுகின்றது. நாணய நிதியத்திடம் செல்வதற்கான ஒரு முன்னோடி நடவடிக்கையாகவே இந்த அறிவிப்பை அரசாங்கம் வெளியிட்டது.

எரிபொருட்கள், கோதுமை மா, சமையல் எரிவாயு, மால்மா போன்றவற்றின் விலைகள் அடுத்த மாதங்களில் மேலும் அதிகரிக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள். அந்நியச் செலாவணி நெருக்கடியைத் தீர்ப்பதற்காக நாணய நிதியம் முன்வைக்கும் நிபந்தனைகளால் இதனைச் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் அரசாங்கத்துக்கு ஏற்படும். நட்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களை தனியார் மயமாக்குவது, மானியங்களை நிறுத்துவது மற்றும் வெளிநாட்டு நாணயங்களை மிதக்கவிடுவது என்பன முக்கிய நிபந்தனைகளாக இருக்கும் என்பதால், அடுத்த மாதங்களில் மேலும் விலை உயர்வுகளையும் அதற்கு எதிரான போராட்டங்களையும் எதிர்பார்க்கலாம்.

அதேவேளையில் பொருளாதார நெருக்கடியை சமாளிப்பதற்காக பெருந்தொயாக நாணயத்தாளை அச்சடித்து வெளியிடும் செயற்பாட்டை இலங்கை மத்திய வங்கி முன்னெடுக்கின்றது. இதுவும் கூட பணவீக்கம் தீவிரமாக அதிகரிப்பதற்கு காரணமாகலாம்.

இதனைவிட ரஸ்ய - உக்ரைன் போர் கூட எரிபொருட்கள், கோதுமை என்பவற்றுக்கான விலை உயர்வுக்கு காரணமாக அமையப்போகின்றது. ஆக, மே, ஜூன் மாதங்கள் இலங்கைக்கு கடினமானதாகவே இருக்கப்போகின்றது.

புதிய நிதி அமைச்சர் அலி சப்ரி தலைமையிலான குழு வாசிங்டனில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ள அதேவேளையில் - இந்தியாவும் இலங்கையின் கோரிக்கைக்கு ஆதரவாக குரல் கொடுத்திருக்கின்றது. இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் இலங்கையின் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள வேண்டும் என சர்வதேச நாணயநிதியத்தை வலியுறுத்தியிருக்கின்றார். இது இலங்கைக்கு மேலும் வலுச்சேர்ப்பதாக இருக்கும்.




இந்தியாவின் இந்த அணுகுமுறைக்கு இரண்டு காரணங்கள் உள்ளன. முதலாவது - இலங்கையின் நிலைமையை தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள புதுடில்லி முற்படுகின்றது. இதன்மூலம் இலங்கையில் தமது செல்வாக்கை அதிகரிக்கலாம் என இந்தியா கருதலாம். அருகேயுள்ள நட்பு நாடு என்ற முறையில், இலங்கையின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இதன் மூலமாக புதுடில்லியும் தனது பங்களிப்பை வழங்குகின்றது.

இரண்டாவதாக - சீனாவை நம்பித்தான் சர்வதேச நாணய நிதியத்தை இலங்கை தொடர்ச்சியாக புறக்கணித்து வந்தது. ஆனால், சீனாவிடமிருந்து எதிர்பார்த்த கடனுதவி கிடைக்காத நிலையில்தான் நாணய நிதியத்திடம் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் இலங்கைக்கு ஏற்பட்டது. இலங்கை மீண்டும் சீனாவிடம் செல்வதைத் தடுக்க வேண்டுமானால், நணய நிதியத்தின் பிடிக்குள் இலங்கையைக் கொண்டுவந்து விட வேண்டும் என்ற இந்தியாவின் உபாயமும் இதற்கு காரணமாக இருக்கலாம்.

இப்போது ஒரு விடயம் தெளிவாகத் தெரிகின்றது - அந்நியச் செலாவணிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு நாணய நிதியம் உதவும். ஆனால், நிலைமை கட்டுப்பாட்டுக்குள் வர ஐந்து - ஆறு மாதங்கள் தேவைப்படும். அதற்குள் எரிபொருட்கள் ஓரளவுக்கு கிடைத்தாலும் அவற்றின் விலைகள் பெருமளவுக்கு அதிகரிக்கும். மக்களுக்கு இதனை தாங்கிக்கொள்வதற்கான வழிகள் இருக்கப்போவதில்லை. எரிபொருட்கள் தாராளமாக வந்துவிட்டால் மக்கள் அமைதியாகிவிடுவார்கள் என அரசாங்கம் எதிர்பார்க்கலாம்.

ஆனால், இந்தப் பொருளாதாரப் பிரச்சினை இப்போது ஒரு அரசியல் பிரச்சினையாகிவிட்டது. ராஜபக்சக்கள் அகற்றப்பட வேண்டும் என்ற கோசம் பலமாக ஒலிக்கத் தொடங்கிவிட்டது. ராஜபக்சக்களின் அரசியல் அவர்கள் செய்தாகச் சொல்லப்படும் ஊழல்கள் இப்போது மக்கள் பேசப்படும் விடயங்களாகிவிட்டன. போர் வெற்றியின் வீரர்களாக ராஜபக்சக்களைத் தூக்கிவைத்த சிங்கள மக்கள் இன்று குப்பைக்கூடைகளில் ராஜபக்சக்களின் படங்களை ஒட்டுகின்றார்கள். சவப்பெட்டிகளில் அவர்களுடைய படங்களைக் கொண்டு சென்று எரிக்கின்றார்கள்.

இந்த நிலையில் எரிபொருட்கள் தாராளமாகக் கிடைப்பதன்மூலமாக மட்டும் அவர்கள் அமைதியாவிடுவார்கள் என்பது எதிர்பார்க்கக்கூடியதாக இல்லை.


## விரைவில் வருகிறது
# 'படைப்பாளர்கள்'

**விரைவில் வெளிவருகிறது படைப்பாளர்களின் ஒரு ஆவணமாக 'படைப்பாளர்கள்' என்னும் நூல்.**

**குறிப்பு (ebook) ஆகவும் நூல் உருவில் வெளியிடப்படும்.**

**சு.பாக்கியநாதன்**
**0152 10378556**
**பி.எஸ்.இராஜகருணா**
**0176 31740702**





அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்

Deutsche Bank

# Willkommen in Ihrer Filiale Duisburg.



Janagran Mahendran
Berater Private Banking

Als Kunde erwarten Sie heute nicht nur erstklassige Finanzlösungen, sondern eine faire und verständliche Beratung. Wir wollen Ihren Ansprüchen gerecht werden – und haben uns zum Ziel gesetzt, Sie als verlässlicher und leistungsstarker Partner auf Ihrem privaten und geschäftlichen Weg zu begleiten. Dafür verbinden wir die Reichweite, Erfahrung und Leistungsstärke eines global führenden Finanzdienstleisters mit der Zuverlässigkeit und Kundennähe einer Hausbank. Sprechen Sie jetzt mit uns.

Filiale Duisburg
Königstraße 7–11, 47051 Duisburg
Telefon (0203) 9922-521
janagran.mahendran@db.com

| | |
|---|---|
| Nettodarlehensbetrag | 1.000 EUR |
| Effektiver Jahreszins* | 1,75 % |
| Fester Sollzinssatz p. a. | 1,74 % |
| Monatliche Rate | 84,12 EUR |
| Laufzeit in Monaten/Anzahl Raten | 12 |
| Zu zahlender Gesamtbetrag | 1.009,43 EUR |

Das Angebot entspricht dem repräsentativen Beispiel gemäß § 6a Absatz 4 PAngV.




* Gilt für einen Kreditbetrag von 1.000 bis 50.000 Euro bei 12 Monatsraten (gilt nur für Kunden ohne bestehenden Deutsche Bank PrivatKredit). Diese Kondition erhalten mindestens 2/3 der Kunden bei Abschluss eines Deutsche Bank PrivatKredits. Laufzeit in Abhängigkeit vom Ratenzahlungsbeginn: 12 bis 16 Monate. Das Angebot ist gültig bis 31. März 2021. Bonität vorausgesetzt.

Darlehensgeber: Deutsche Bank AG, Theodor-Heuss-Allee 72, 60486 Frankfurt am Main



# விஜய்க்கு திருஷ்டி எடுத்த ராஷ்மிகா!

பீஸ்ட் படம் விஜய் ரசிகர்கள் உள்ளிட்ட பலருக்கும் ஏமாற்றத்தை தந்ததாலும் தற்போது, அசத்தலான தளபதி 66 பூஜை படங்கள். இணையத்தில் வைரலாகி வருகின்றன. ஒரு படம் தோற்றால் என்ன? வென்றால் என்ன ? பெரிய நடிகர்களை அது வெகுவாகப் பாதிப்பதில்லை. வம்சியின் இயக்கத்தில் அடுத்தபடம் தயாராகிறது. விஜய்யின் பயங்கர ரசிகையான ராஷ்மிகா, விஜய்க்கு திருஷ்டி எடுத்து, மகிழ்ச்சி தெரிவித்தபடம் ரசிகர்களைக் கொண்டாட வைத்துள்ளது.

அதே நேரம் ரஜினி, பீஸ்ட் படத்தை பார்த்து அப்செட் ஆனது உண்மை தானாம். அதற்காக டைரக்டரை மாற்றும் அளவிற்கு போகவில்லையாம். மாறாக நெல்சனிடம் கதையில் சில மாற்றங்களை செய்ய ஆலோசனை வழங்கி உள்ளாராம். நெல்சனும் இதற்காக ரஜினியிடம் கொஞ்சம் அவகாசம் கேட்டுள்ளாரதாம். தலைவர் 169 படத்திற்கு இறுதியான கதை, திரைக்கதையை நெல்சன் தயார் செய்து, அது ஓகே ஆனதும் ஜ/லை மாதம் முதல் திட்டமிட்டபடி தலைவர் 169 படப்பிடிப்பு தொடங்கப்பட உள்ளதாம்.

மொத்தத்தில் தலைவர் 169 படத்தை நெல்சன் தான் இயக்க போகிறார் என்பதில் எந்த வித மாற்றமும் இல்லை என்பது மட்டும். ஆனால் ரஜினி அரசியல் சினிமா எதிலும் சொன்ன சொல் மாறமாட்டார் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை . மற்றவர்களுக்காக முடிவெடுப்பவர் அல்ல அவர்.

# ரஜினி, விஜய் விட்டா ஆளே இல்லையா!

சமீப காலமாக பிற மொழிகளில் எடுக்கப்பட்டு, தமிழில் டப் செய்யப்பட்ட படங்கள் வசூல் சாதனை படைத்து வருகின்றன. பாகுபலி, ஆர்ஆர்ஆர், கேஜிஎஃப் சாப்டர் 2, புஷ்பா போன்ற படங்களின் வசூலை பார்க்கையில் தமிழ் படங்களின் வசூல் சுமார் ரகம் தான். ரஜினியின் 2.0 மட்டுமே





இதுவரை தமிழில் 700 கோடிக்கும் அதிகமான வசூலை எட்டி உள்ளது. அதற்கு பிறகு விஜய் படங்கள் தான் அதிகபட்சமாக 200 கோடிக்கும் அதிகமாக வசூல் செய்கின்றன. ரஜினி, விஜய்யை தொடர்ந்து தற்போது அஜித் நடித்த வலிமை 250 கோடி, சிவகார்த்திகேயன் நடித்த டாக்டர் 100 கோடி, சிம்பு நடித்த மாநாடு 100 கோடி வசூல்களை தாண்டி உள்ளன. தமிழ் சினிமாவில் 100 கோடி வசூலே மிகப் பெரிய சாதனையாக பார்க்கப்படுகிறது.

ஆனால் பாகுபலி, ஆர்ஆர்ஆர் படங்கள் மிக சாதாரணமாக 1000 கோடி வசூலை கடந்துள்ளன. இதற்கு என்ன காரணம், வேற்று மொழி படங்கள் தமிழில் வசூலை குவிக்க முடிகிறது என்றால் தமிழ் படங்களால் ஏன் அந்த சாதனையை எட்ட முடியவில்லை.

வசூல் பாதிக்க இதுதான் காரணமா? ஆர்ஆர்ஆர் படம் 3 ஆண்டுகள் உழைப்பை கொட்டி எடுத்தார்கள். பாகுபலி 6 ஆண்டுகள் உழைத்து எடுக்கப்பட்ட படம். ஆனால் தமிழ் நடிகர்கள் ஒரு வருடத்திற்கு 2 முதல் 3 படங்களில் நடிக்கிறார்கள். அவசரமாக படத்தை முடிக்க வேண்டும் என நினைப்பதால், படத்தின் தரம் குறைந்து விடுகிறது. அது வசூலை பாதிக்கிறது. அதே நேரம் தமிழ் சினிமாவில் சார்பட்டா பரம்பரை, டாணாக்காரன், ஜெய்பீம், கடைசி விவசாயி போன்ற நிறைய தரமான நல்ல படங்கள் வரத் தான் செய்கின்றன. ஆனால் இந்த படங்கள் எல்லாம் ஓடிடியில் மட்டுமே ரிலீஸ் செய்யப்படுகின்றன. தியேட்டருக்கு வருபவர்கள் பிரம்மாண்டத்தை மட்டுமே எதிர்பார்ப்பதால், தரமான படங்கள் பல வந்ததே பலருக்கு தெரியாமல் போய் விடுகிறன.

# ஒருபோதும் நடவாது!

## — சமந்தா



நடிகை சமந்தா சமீபத்தில் தனது விவாகரத்து மற்றும் புஷ்பா படத்தில் கவர்ச்சி நடனம் ஆகியவற்றால் மிகவும் பரபரப்பான நடிகையாக பேசப்பட்டு வருகிறார். ஆனால் சமந்தா இதை எதையும் காதில் வாங்கிக் கொள்ளாமல் கூலாக சினிமாவில் கவனம் செலுத்தி வருகிறார்.

இதையடுத்து தற்போது அவர் காத்து வாக்குல ரெண்டு காதல் மற்றும் யசோதா ஆகிய படங்களில் நடித்து வருகிறார். இந்நிலையில் தற்போது அவர் இன்ஸ்டாகிராம் பக்கத்தில் ரசிகர் ஒருவர் கேட்ட "என்றாவது ஒரு நாள் நீங்கள் டாட்டு இட்டுக்கொள்ள வேண்டும் என நினைத்ததுண்டா?" என்ற கேள்விக்கு பதிலளித்துள்ளார். அதில் 'நான் எப்போதும் என்றைக்கும் என் உடலில் டாட்டு போட்டுக்கொள்ள மாட்டேன்" எனக் கூறியுள்ளார்.




## 16 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

திருமதி ஞானேஸ்வரி சிவஞானசுந்தரம்

தோற்றம் : 25.09.1942
மறைவு : 09.05.2006

பதினாறு ஆண்டுகள் சென்றாலும் தினம்
உன் நினைவு மட்டும் என்றும் எம்முடனேயே
அம்மா என்றும் அன்பே என்றும் சொல்ல
நீயில்லை!
உன் நினைவால் வாடி வதங்குகின்றோம்
இதயத்தில் உன்னால் விதைக்கப்பட்ட அன்புகள்
இப்போ செழித்து பூத்து குலுங்குகின்றன
நினைவெல்லாம் நீயே தாயே!

என்றும் உன்னை மறக்காமல் வாடும்
அன்புக் கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

தகவல்: சு.சிவஞானசுந்தரம் 0176 69 366 433



## வுப்பெற்றால் ஸ்ரீ நவதுர்க்கா அம்பாள் ஆலய
## தேர்த் திருவிழா- 14.05.2022

கொடி : 06.05.2022
தேர்: 14.05.2022

Tel: 0202 479 60 17

Hünefeld Str 63b 42282 Wuppertal



தேர் தெருவீதி உலாவரும்


அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்



















அனைவருக்கும் எங்கள் மே தின வாழ்த்துகள்